

‘தமிழன்’ பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 03 சோபகிருது வருடம், ஆனி மாதம் 11ஆம் திகதி திங்கட்கிழமை (26.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 07, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## 08 அடுக்குமாடி குடியிருப்புகள் ஆபத்தில்

### இடிப்பதற்கு அரசு உத்தேசம்

த. யுவராஜ்

கொழும்பு மாநகர சபையில் உள்ள 08 அரச அடுக்குமாடி குடியிருப்புகள் பாரியளவில் பாழடைந்து காணப்படுவதால், அந்த வீடுகளில் வசிக்கும் மக்களின் உயிருக்கு...

02 பக்கம்

## 09 இலட்சம் கடவுச்சீட்டுகள் 2022 இல் விநியோகம்

2022ஆம் ஆண்டு 09 இலட்சத்து 11 ஆயிரத்து 689 கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தத் திணைக்களத்தின் வருடாந்த செயல்திறன் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 02 பக்கம்





# டெங்கு ஒழிப்புக்கு விசேட வேலைத்திட்டம்

### அரசு அறிவிப்பு - வார இறுதியில் முப்படையினரின் உதவியுடன் ஆரம்பம்

02பக்கம்

## பொலிஸ்மா அதிபரின் சேவைக்காலம் நீடிப்பு

த. யுவராஜ்

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு இரண்டாவது சேவை நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரது சேவைக்காலம் இன்றுடன் (26) முடிவடையும் நிலையில், புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் அரசியலமைப்பு பேரவைக்கு இதுவரை எந்த சிபாரிசுகளும் செய்யப்படவில்லை. இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிக்கையில், புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் ஜனாதிபதி வருகையின் பின்னர் கலந்துரையாடப்படும் என தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன ஜூன் 26 அன்று ஓய்வு பெறவிருந்த நிலையில், அரசாங்கத்தினால் அவருக்கு மேலும் மூன்று மாத கால சேவை நீடிப்பு வழங்கப்படலாமென நம்பப்படுகிறது.







‘தமிழன்’ பத்திரிகையின் மூன்றாவது ஆண்டு அகவை நிறைவை முன்னிட்டு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் தலைவர் திலித் ஜயவீரவுக்கு புரவலர் ஹாஷிம் உமர் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் தமிழனின் பிரதம ஆசிரியர் சிவா இராமசாமி இருப்பதையும் ‘ஜுனியர் தமிழன்’ பத்திரிகையின் வினாவிடைப் பொதி அறிமுகம் செய்யப்படுவதையும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

## ஊடகங்களின் சுதந்திரம் பேச்சளவில் மாத்திரமே

### ‘தமிழன்’ ஆண்டுவிழாவில் ஹக்கீம் எம்.பி. தெரிவிப்பு



நா. தினுஷா

ஊடக சுதந்திரம், ஊடக தர்மம் போன்ற சொற்களெல்லாம் அடிக்கடி துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன... 02 பக்கம்

## மக்கள் அபிமானம் மிக்க பத்திரிகையாக தமிழன்

### ஆண்டுவிழாவில் இராதா எம்.பி. வாழ்த்து



நா. தினுஷா

எதிர்காலத்தில் இன்னும் சுவையான நல்ல நல்ல செய்திகளை சுடச்சுட வழங்கி எல்லோருக்கும்... 02 பக்கம்

## தமிழன் பத்திரிகை குறித்து முறைப்பாடுகள் கிடையாது

### சுமந்திரன் எம்.பி. புகழாரம்



நா. தினுஷா

‘தமிழன்’ இளம் வயது பத்திரிகை தான். மூன்று ஆண்டுகளே நிறைவடைந்துள்ளன. ஆனால் இந்த மூன்று ஆண்டுகளில்... 02 பக்கம்

## உரிமையாளர் தலையீடு ஊடக விடயத்தில் கூடாது

### லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் தலைவர் திலித் தெரிவிப்பு



ஊடக விடயத்தில் அதன் உரிமையாளர்கள் தலையிடக் கூடாது. அவற்றை சுதந்திரமாக இயங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



ஏற்கனவே வெடிச்ச வெடிப்புகள் போதாதோ?

## மீண்டும் ஓர் ‘அரகலய’ போராட்டம் வெடிக்கும்

### எச்சரிக்கின்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.



காரைதீவு செய்தியாளர்

நாட்டில் மீண்டும் ஒரு ‘அரகலய’ போராட்டம் வெடிக்கும் நிலை உருவாகியுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். 02 பக்கம்

### உத்தியோகத்தர்களுக்கு ஒத்த சீருடையில்

## சிறையிலிருந்து தப்பிய கைதி மருதானையில் மடக்கிப்பிடிப்பு

கே. சுபானி

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மரண தண்டனை கைதியொருவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சீருடையை ஒத்த ஆடைகளை அணிந்து நேற்று (25) சிறையிலிருந்து... 02 பக்கம்



உஷ்

தனது பிறந்த நாளையொட்டி கோட்டாபய ராஜபக்ஷ நாரஹேன்பிட்டி விகாரையொன்றில் வழிபாட்டு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் சமல் ராஜபக்ஷவை தவிர வேறு எந்த ராஜபக்ஷமாரும் கலந்துகொள்ளவில்லையாம். ஆனால் முக்கிய பிக்குமார்கள் கலந்துகொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனராம்.




## டெங்கு...

எதிர்வரும் வார இறுதியில் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்புக்கான விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதால் மக்கள் வீடுகளிலேயே தங்கியிருந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கோருவதாக டெங்கு ஒழிப்பு நிபுணர் குழுவின் தலைவியும் சுகாதார இராஜாங்க அமைச்சருமான விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல இதனைத் தெரிவித்தார்.

இந்த திட்டத்தைத் தொடர்ந்து கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களை உள்ளடக்கி ஒரு வாரத்துக்கு நுளம்புக் குடம்பிகளை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் டெங்கு ஒழிப்புக்கான அமைச்சர் குழுவொன்றையும் நிபுணர் குழுவொன்றையும் நியமித்ததோடு நிபுணர் குழுவினால் மாகாண மட்டத்தில் 09 உப குழுக்கள் நியமிக்கப்பட்டு நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

டெங்கு நுளம்புகள் அதிகம் பெருகும் பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக வளாகங்கள் மற்றும் கைவிடப்பட்ட காணிகள் என்பவற்றில் பரிசோதனை மேற்கொள்ள விசேட தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு இந்த செயற்திட்டங்கள் மேல்மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய மாகாணங்களுக்குத் தனித்துவமான பிரச்சினைகளை அடையாளங்கண்டு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்குவிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

ஜனவரி மாதம் முதல் இதுவரை 47,000 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர்களுள் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், தற்போது நிலவும் காலநிலையுடன் டெங்கு பரவல் அதிகரித்துள்ளதாகவும் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தாவிட்டால் கொவிட் தொற்றைப் போன்று டெங்கு நோயும் அபாயகரமான நிலைமைக்கு மாறக் கூடும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல,

"டெங்கு பரவுவது உலகளாவிய பிரச்சினையாக மாறிவிட்டது. இந்த வருடத்தின் முதற்பகுதியில் மாத்திரம் 47,000 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 27 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன.

இந்நிலைமையை கருத்திற் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சர் குழுவும் நிபுணர் குழுவும் நியமிக்கப்பட்டது. நிபுணர் குழுவில் விசேட வைத்திய நிபுணர்களான ஆனந்த விஜேவிக்ரம, லக்குமார் பெர்னாண்டோ, உபுல் திஸாநாயக்க மற்றும் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பேராசிரியர் நீலிகா மாளவிகே ஆகியோர் அடங்குவர். டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துகையில் நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதும் நுளம்புக்கு வைரஸ் வராமல் தடுப்பதும் மிகவும் முக்கியமானது.மழை காலங்களில் தண்ணீர் தேங்கும் இடங்களை கண்டறிந்து நுளம்புகள் உற்பத்தியாவதை தடுக்க முடியும். நுளம்பு கடிக்கும் வாய்ப்புகளை குறைக்க மக்களுக்கு அறிவூட்டுவது மிகவும் அவசியம். மக்கள் தொகை அதிகம் உள்ள பகுதிகளில், ஒரு நுளம்பிடமிருந்து அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு டெங்கு பரவும் வாய்ப்பு கூடுதலாகக் காணப்படுகிறது.

மாகாணங்களில் நியமிக்கப்பட்டுள்ள டெங்கு ஒழிப்பு உப குழுக்களின் ஊடாக தொடர் அவசர வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்வரும் மாதங்களில், மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளர் தொகை அதிகரிப்பதை மட்டுப்படுத்த இந்த செயற்பாடுகளின் ஊடாக முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் வார இறுதியில் முப்படையினரின் ஆதரவுடன் கொழும்பு நகரில் விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. டெங்கு ஒழிப்புப் பிரிவு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இதற்கு பணியில் இணைந்து கொள்ளவுள்ளதுடன் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் உரிய அறிவித்தல்களை மேற்கொள்ளும். அதன்படி, எதிர்வரும் வார இறுதியில் மக்கள் வீடுகளிலேயே தங்கியிருந்து இதற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதன் பின்னர், கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட நாட்களில் பாடசாலைகள், மத ஸ்தலங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், கைவிடப்பட்ட காணிகள் உள்ளிட்ட டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களில் ஒரு வாரத்துக்கு நுளம்புக் குடம்பிகள் குறித்து பரிசோதனை செய்யப்படும்.

அதேநேரம், மாகாண சுகாதார அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இந்த வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தான் நோயாளி என்பதை உணர்ந்து மற்றவர்களுக்கு நோய் பரவாமல் தன்னை பாதுகாத்துக் கொள்ள டெங்கு நோயாளர்கள் முன்வர வேண்டும். அதிலும் குறிப்பாக இந்த சமயத்தில் ஊடகங்களினால் பெரும் பங்காற்ற முடியும் என்றார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்படும் 101 கலந்துரையாடல் நிகழ்வில், உடலியல் நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவிக்கையில்,

இந்நாட்களில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் தலையீட்டின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் டெங்கு ஒழிப்புத் திட்டத்தை அரச,தனியார் துறைகள் பொதுமக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். தொடர்ச்சியாக இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் டெங்கு நோயைக்கட்டுப்படுத்தும் இயலுமை காணப்படுகின்றது. எதிர்வரும் பருவகாலத்தை தொடர்ந்து டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக்கூடும். பொதுவாக ஜூலை மாதத்தில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடியும். அந்த வகையில் எதிர்வரும் நாட்களில் நோயாளர்கள் அதிகரிக்க கூடும் என்பதால் அனைத்துத் துறையினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் எனவும் தெரிவித்தார்.

## 09 இலட்சம்...

நாட்டில் கடந்த ஐந்து வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டிலேயே அதிக எண்ணிக்கையிலான கடவுச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அந்த ஆண்டில் ஐந்து இலட்சத்து 29 ஆயிரத்து 138 கடவுச் சீட்டுகள் மேலதிகமாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக 20 இலட்சத்து எண்ணாயிரத்து 66 பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஒன்பது நாட்களில் ஒன்பதாயிரத்து 158 விண்ணப்பங்கள் ஒன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

## 08 அடுக்குமாடி...

பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த வீட்டுத் தொகுதிகளை இடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.வாகந்த அடுக்குமாடித் திட்டம், பம்பலப்பிட்டி வீடமைப்புத் திட்டம், வேல்ஸ் குமார மாவத்தை வீடமைப்புத் திட்டம், சிறிதம்மா மாவத்தை வீடமைப்புத் திட்டம், கந்தபுர அடுக்குமாடித் திட்டம், டீ36 மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டம், ஜி. எச். ஜே. கே. எம். வீடமைப்புத் திட்டம் மற்றும் என் மிஹிந்து மாவத்தை வீடமைப்புத் திட்டம் ஆகிய எட்டு வீட்டுத் தொகுதிகள் இவ்வாறு ஆபத்தான நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ அதிகாரசபை அந்த வீட்டுத் தொகுதிகள் இடிக்கப்பட வேண்டுமென வீடமைப்பு அமைச்சிடம் முன்மொழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உத்தியோகத்தர்களுக்கு...

தப்பிக்க முயன்றுள்ளார்.

சிறையிலிருந்து வெளியேறி மருதானை புகையிரத நிலையத்துக்கு வந்து ரயிலில் ஏறித் தப்பிச் செல்ல முயன்றபோது, அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் கைதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் சமய நிகழ்ச்சிக்காக சிறைக்கூண்டிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர் அங்கிருந்து தப்பிச் சென்று சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் சீருடையை ஒத்த உடை அணிந்து கொண்டு காவலர்களுக்கு தவறான தகவல்களைக் கூறி பிரதான வாயிலின் ஊடாக தப்பிச் சென்றுள்ளார்.

அவரது நடத்தையில் சந்தேகமடைந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், அவரை விரட்டிச் சென்றனர். அப்போது மருதானை புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்தனர்.

இவர் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் 06.03.2015 அன்று கம்பஹா மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த கைதி பன்னல, வாவெகொடுவ, உலகொடுவெல்ல பகுதியைச் சேர்ந்த (42) வயதுடையவர் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கைதியை வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து பூசா சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மீண்டும் ஓர்...



காரைதீவு கலாசார மண்டபத்தில் அவருடைய பங்கேற்புடன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தியாகிகள் நினைவு தினம் நேற்று முன்தினம் (24) அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயற்பாட்டாளர்கள், தியாகிகளின் குடும்பத்தினர் பங்கேற்று உணர்வுபூர்வமாக தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் பேராளராக கலந்து கொண்டு பிரதம உரை ஆற்றியபோது மேலும் அவர் தெரிவித்ததாவது,

சமூர்த்தி பயனாளிகளின் தெரிவு முறையற்ற விதத்தில் இடம்பெற்றிருக்கின்றது. இதனால் நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மீண்டும் ஒரு அரகலய போராட்டம் வெடிக்கும் நிலை தெரிகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார பிரச்சினைகளை காரணம் காட்டி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை இழுத்தடிக்கக் கூடாது.

தோழர் பத்மநாபா உயிருடன் இருந்திருந்தால் முள்ளிவாய்க்கால் பேரழிவு தவிர்க்கப்பட்டிருக்கும். இணைந்த வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு மலர்ந்திருக்கும்.

அது பின்னர் சமஷ்டியாக வலுப் பெற்றிருக்கும். ஏனென்றால் எமக்கு பக்கத்தில் இந்திய வல்லரசு உள்ளது. ஈழ விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட 05 கட்சிகளும் ஒன்று சேர்ந்து உண்மையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தற்போது பயணித்துக் கொண்டிருக்கின்றோம் என்றார்.

## உரிமையாளர்...

லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

'தமிழன்' பத்திரிகையின் மூன்றாவது அகவை நிறைவு விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்றபோது விழாவுக்கு தலைமைதாங்கி உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், எங்களது ஊடக குழுமத்தில் தமிழன் பத்திரிகை நட்சத்திரம் போன்றது. தமிழ் பேசும் மக்களுக்கு சுயாதீனமாக தகவல்களை வழங்குவதற்கான இடைவெளியை தமிழன் பத்திரிகை நிரப்புகிறது என நம்புகிறோம்.

ஊடக நிறுவனங்கள் அதன் உரிமையாளர்களது கருத்து வெளிப்பாட்டாக அமைகின்றன என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால் எங்களது நிறுவனத்தின் தமிழன் பத்திரிகை அதற்கு விதிவிலக்காக திகழ்கின்றது. ஊடக நிறுவனமானது 18 வருடங்களாக நடத்திவருகிறோம். ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஊடகங்களின் சுயாதீனத்தில் தலையிடாமல் இருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

ஆயினும் ஊடகங்களின் செயற்பாடுகளில் உரிமையாளர்கள் தலையிடுவதாகக் கூறுகிறார்கள். அதில் விசேடமாக என்னைக் குறிப்பிடுகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், தமிழன் பத்திரிகை தொடர்பில் எனக்கு பல்வேறு அழைப்பு வருகின்றன. ஆங்கில, சிங்கள பத்திரிகைகள் தொடர்பிலும் அழைப்புகள் வருகின்றன. ஆயினும் நான் ஆசிரிய பீட சுதந்திரத்தில் தலையிடுவதில்லை.

பத்திரிகை அச்சிடப்பட்டு காலையில் எனது வீட்டுக்கு விநியோகிக்கப்படும்போதே நான் பத்திரிகைகளை வாசிக்கிறேன். பத்திரிகையில் எந்த செய்தி எழுதப்படுகிறது என்பது தொடர்பில் நான் ஆசிரியர்களின் சுதந்திரத்தில் தலையிடுவதில்லை. அவ்வாறானதொரு சுதந்திரத்தை தான் நாம் தொடர்ந்தும் கடைப்பிடிக்க விரும்புகிறோம்.

தமிழன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது, இந்தப் பெயர் குறித்த சர்ச்சை இருந்தது. ஆயினும் இந்த மூன்று ஆண்டுகாலப்பகுதியில் மிகவும் நடுநிலைமையான பத்திரிகையாக தமிழன் தன்னை நிலைநிறுத்தியிருக்கிறது. தமிழன் குழுவில் பங்கேற்றிருப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

தமிழன் பத்திரிகையின் ஆசிரியர் சிவா இராமசாமி சிறப்பாக தலைமையேற்று நடத்துகிறார். அவர் ஓரிரு பணியாளர்களைக் கொண்டு இதனை ஆரம்பித்தார். அதுபற்றி நாம் பெருமையடைகிறோம்.

தமிழ் மக்கள் தங்கள் மொழியின் மீது அதீத பற்றுடையவர்கள். அந்த மொழியினூடாக தொடர்பாடலை மேற்கொண்டு வரலாற்று பாரம்பரியத்தை காக்கும் வகையில் செயற்பட வேண்டும். தமிழ் மொழிக்கு பலம்பொருந்திய இலக்கிய பின்புலம் இருக்கிறது. அதனையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

இதன்மூலம் தமிழ்பேசும் வாசகர்களுக்கு பிரதானமாக முஸ்லிம் வாசகர்களுக்கும் காத்திரமான பணியை முன்னெடுக்க முடியும் என நான் நம்புகிறேன்.

முஸ்லிம் மக்களுக்காக நவமணி பத்திரிகையை நாம் நடத்துவதென ஆரம்பம் கொண்டிருந்தோம். ஆனாலும் நண்பர் ரிஷாட் பதியுதீன் அதனை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். அந்தப் பெயருக்கு உரிமையுள்ளவரின் அனுமதியுடன் நவமணி பத்திரிகையை மீண்டும் புத்துருவாக்கம் செய்ய நாம் விரும்புகிறோம் என்றார்.

## தமிழன் பத்திரிகை...

இந்த பத்திரிகையில் வரும் செய்திகள் சம்பந்தமாகவோ கட்டுரைகள் சம்பந்தமாகவோ எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் எனக்கு மனதில் எழுந்ததில்லை. ஏனென்றால் உள்ளதை உள்ளபடியே கூறவும் செய்திக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் செய்தியை அப்படியே சொல்வதிலே இந்த பத்திரிகை இதுவரை காலமும் திறம்பட செயற்பட்டுள்ளது. 'தமிழன்' பத்திரிகை தமிழ் செய்திகளை தமிழ் கூறும் நல்லுலகுக்கு தொடர்ந்து எடுத்துச் செல்லட்டும் என்று வாழ்த்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு, சரஸ்வதி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்ற "தமிழன் பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தமிழன் என்ற பத்திரிகை ஆரம்பமான போதே, அந்தப் பத்திரிகையில் ஒரு வித்தியாசம் இருந்தது. நான் வேலிப்பட்ட வகையில், பத்திரிகைக்கு பெயர் வைக்கும் போது ஓர் இனத்தின் பெயரை வைப்பது இதுவே முதல் தடவை. பொதுவாக செய்திகளை கொண்டு செல்லும் பாணியிலேயே பெயர் வைப்பார்கள். அதுவே வழக்கமுமாகும். அவ்வாறு இருக்கையில் தமிழன் என்ற சொல்லோடு ஒரு பத்திரிகை வெளிவருவது வியத்தகு விடயமாகும். ஆனால் சுடரொளி பத்திரிகை வெளிவந்த காலத்தில் இருந்தே எனக்கு பத்திரிகையின் ஆசிரியர் சிவராஜ் பரிச்சயமானவர். இந்த பத்திரிகை ஆரம்பிப்பதற்கு முன்னரே இப்படியொரு எண்ணம் இருப்பதாக சொல்லி இருந்தார். எனது நிலைப்பாட்டையும் கேட்டிருந்தார்.

அது கொவிட் தொற்று பரவலடைந்த காலம். பத்திரிகை வாசிப்பதே பொழுது போக்கு. அதற்கு நான், நல்ல விடயம் சிவராஜ் என்று கூறியிருந்தேன். எனக்கும் பத்திரிகைகளுக்கும் உறவு நன்றாக இருந்ததில்லை. ஆகையால், இன்னொரு பத்திரிகை செய்திகளை வெளியிடுவது நல்ல விடயம் என்று கூறியிருந்தேன்.

இது இளம் வயது பத்திரிகை தான். மூன்று ஆண்டுகளே நிறைவடைந்துள்ளன. ஆனால் இந்த மூன்று ஆண்டுகளில் இந்த பத்திரிகையில் வரும் செய்திகள் சம்பந்தமாகவோ கட்டுரைகள் சம்பந்தமாகவோ எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் எனக்கு மனதில் எழுந்ததில்லை. ஏனென்றால் உள்ளதை உள்ளபடியே கூறவும் செய்திக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் செய்தியை அப்படியே சொல்வதிலே இந்த பத்திரிகை இதுவரை காலமும் திறம்பட செயற்பட்டுள்ளது.

எனவே, இந்த பத்திரிகைக்கு சிறந்தவொரு எதிர்காலம் இருக்கிறது என்று நாங்கள்,அனைவரும் நம்புகிறோம், வாழ்த்துகிறோம். தொடர்ந்தும் தமிழன் பத்திரிகை தமிழ் செய்திகளை தமிழ் கூறும் நல்லுலகுக்கு எடுத்துச் செல்லட்டும் என்று வாழ்த்துகிறேன் என்றார்.

## மக்கள் அபிமானம்...

பொதுவான பத்திரிகை என்று 'தமிழன்' பெயர் எடுக்க வேண்டும். தமிழன் பத்திரிகை மக்கள் மத்தியில் அபிமான பத்திரிகையாக வளர்ந்து வருகிறது என வாழ்த்துவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.கொழும்பு, சரஸ்வதி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்ற 'தமிழன்' பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பொதுவான பத்திரிகை என்பது பத்திரிகை தர்மம் என்று சொல்லப்படுகின்ற நியாயம், நேர்மை, அதனுடைய கடப்பாடுகளை செய்வதற்கு உடன்பட்டிருக்கிறது. ஆனால் எத்தனை பத்திரிகை இதனை நியாயமாக செய்கிறது என்று கேட்டால் அது கேள்விக் குறியாகவே இருக்கும்.

இருந்தாலும் கூட தமிழ் பத்திரிகைகளிலே விரல் விட்டு எண்ணக்கூடிய பத்திரிகைகளுள் ஒன்றான தமிழன் பத்திரிகை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதன் செய்திகளை சுடச்சுட மக்களுக்கு கொண்டு செல்வதும் உண்மையான செய்திகளை சொல்லவதிலும் சுவாரஷ்யமான கட்டுரைகளை எழுதுவதிலும் சுவைக்கின்ற வகையில் சினிமா செய்திகளை எழுதுவதிலும் மக்களின் நவரச தன்மைக்கு ஏற்பவும் செய்திகளை கொண்டு செல்கிற ஒரு பத்திரிகையாக இருப்பதனாலேயே இன்று இந்த பத்திரிகை மக்கள் மத்தியில் அபிமான பத்திரிகையாக வளர்ந்து வருகிறது.ஆகவே இந்த பத்திரிகையின் வளர்ச்சி தொடர்ந்து மேலும் வளர வேண்டும். அதன் செயற்பாடுகள் நன்றாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். சிறந்த கட்டுரைகளினூடாக நல்ல தகவல்களை வழங்கும் நண்பர் சிவராஜாவின் சேவையை பாராட்டுகிறேன். அவரின் சேவை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இந்த பத்திரிகையின் உரிமையாளர் திலித் ஜெயவீர இந்த மேடையில் மூன்று இனங்களையும் சேர்ந்த கலைஞர்களை விருது வழங்கி கௌரவித்திருந்தார். அதனூடாக, இன, மத பேதமின்றி சகலரையும் சமமாக மதிக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்கி உள்ளீர்கள். எதிர்காலத்தில் இன்னும் சுவையான நல்ல நல்ல செய்திகளை சுடச்சுட வழங்கி எல்லோருக்கும் பொதுவான பத்திரிகை என்று பெயர் எடுக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என்றார்.

## ஊடகங்களின்...

என்பது வாசகர்களின் பார்வையாகும். உண்மைகளை பிரித்தறியக் கூடிய வாசகர்கள் எமது நாட்டில் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதனாலேயே காலம் கடந்தாயினும் சில நியாயங்கள் நிரூபிக்கப்படுகின்றபோது அதனை நாங்கள் கொண்டாடுகிறோம். ஊடகங்களின் சுதந்திரம் பேச்சளவில் மாத்திரமே காணப்படுகிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். கொழும்பு, சரஸ்வதி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்ற "தமிழன் பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஒரு தமிழ் ஊடகம் மூன்று வருட காலம் தனது பயணத்தை சாமர்த்தியமாக கொண்டுசென்றுள்ளது என்ற எண்ணம் போது பூரிப்பாக இருக்கிறது.

ஊடக சுதந்திரம், ஊடக தர்மம் போன்ற சொற்களெல்லாம் அடிக்கடி துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்பது வாசகர்களின் பார்வையாகும். உண்மைகளை பிரித்தறியக் கூடிய வாசகர்கள் எமது நாட்டில் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதனாலேயே காலம் கடந்தாயினும் சில நியாயங்கள் நிரூபிக்கப்படுகின்ற போது அதனை நாங்கள் கொண்டாடுகிறோம். உதாரணமாக ஊடக நிறுவன உரிமையாளர்களும் ஊடகவியலாளர்களும் தணிக்கையை விரும்ப மாட்டார்கள். தணிக்கை என்று யார் கூறினாலும் சுயமாக தணிக்கை செய்து கொள்ள இடமளிக்குமாறே அவர்கள் கோருவார்கள்.

தணிக்கை நடந்தோ இல்லையோ இந்த நாட்டில் 20க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். நண்பர் சிவராஜ் இதற்கு முன்பு 'சுடரொளி' பத்திரிகையின் பொறுப்பு ஆசிரியராக இருந்தார். நண்பர் வித்தியாதரன் அந்த பத்திரிகையில் இருந்து விலகியதன் பின்பு, அந்த பத்திரிகையின் நிலைமையை காத்திரமாக ஆசிரியராக பங்காற்றியிருந்தார். இவ்வாறு அனுபவம் வாய்ந்த ஆசிரியர் தமிழன் பத்திரிகையை மிக அழகாக வடிவமைத்து மிக சிறப்பாக செய்து வருகிறார் என்பது எங்கள் எல்லோருக்கும் பூரண திருப்தி.

ஊடக சுதந்திரம், ஊடக தர்மம் எல்லாம் வெறும் பேச்சளவில் இருக்கும் இந்த காலப்பகுதியில் காலம் தாழ்ந்து குறை ஒப்புதல்கள் நடப்பதும் காலம் தாழ்ந்தாவது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைப்பதும் நடந்தாலும் கூட ஊடகங்கள் கண்டிக்கப்படுவதில்லை. ஏனென்றால் அவர்களுக்கு சிறப்புரிமை இருக்கிறது.

ஊடகம் என்பது அவ்வளவு இலகுவான துறையும் அல்ல. நிறைய தூற்றுதல்களை வாங்கி விமர்சனங்களையும் கேட்க வேண்டும். ஆனால் எங்களுக்கு இருக்கும் சிறப்புரிமைகளில் வேறு எவரும் தலையிட முடியாது என்று சர்வதேசத்தோடு செயற்படுகின்ற சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. அவற்றால் நன்மையும் விளையலாம். தீமையும் விளையலாம்.

எனவே இவற்றையெல்லாம் புரிந்து கொள்கிற, பிரித்தறிகின்ற வாசகர் கூட்டம் இலங்கையில் இருக்கிறார்கள் என்பதை மனதில் வைத்து கொண்டே ஊடக நிறுவனங்கள் செயற்பட வேண்டும் என்றார்.


National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.06.23 — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
| --- | --- | --- | --- | --- |
| மஹஜன சம்பத | 5154 | ரூ. 19,909,029.00 | Y | 5 4 9 9 0 7 |
| கொவிசெத | 3396 | ரூ. 65,283,124.00 | S | 11 17 38 59 |
| ஜாதிக சம்பத | 1609 | ரூ. 12,871,997.52 | | 0 9 7 9 1 5 |
| தன நிதானய | 1184 | ரூ. 96,558,566.40 | R | 03 47 57 60 |
| ராசி சப லங் | 463 | ரூ. 2,861,804.00 | | 14 19 32 45 |
| Mega Power | 1502 | ரூ. 331,661,034.00 | J | 04 / 51 61 74 75 |

National Lotteries Board — சனிக்கிழமை 2023.06.24 — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
| --- | --- | --- | --- | --- |
| மஹஜன சம்பத | 5155 | ரூ. 20,970,595.00 | N | 1 8 7 5 7 1 |
| கொவிசெத | 3397 | ரூ. 65,446,961.60 | Q | 01 54 67 75 |
| ஜாதிக சம்பத | 1610 | ரூ. 12,946,048.32 | | 0 5 5 8 8 7 |
| தன நிதானய | 1185 | ரூ. 96,773,332.00 | V | 27 39 63 79 |
| ராசி சப லங் | 464 | ரூ. 2,901,704.40 | | 19 20 23 32 |
| Mega Power | 1503 | ரூ. 332,041,250.00 | S | 11 / 19 21 38 66 |

ரூ. 10,000,000.00

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் ஐந்து ஊடகவியலாளர்களுக்கு கௌரவம்





ஏ.எஸ்.எம்.ஜாவித்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 26 ஆவது வருடாந்த மாநாடு கொழும்பு பிரதம தபாலகத்தில் போரத்தின் தலைவி புர்கான் பீ இப்திகார் தலைமையில் நேற்று(25) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் பத்லி ஹிஷாம் ஆதம் கலந்து கொண்டார்.

முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் என்.எம்.அமீன் வரவேற்புரையையும் போரத்தின் தலைவி புர்கான் பீ.இப்திகார் தலைமையுரையையும் சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ் மர்ஹும் கலைவாதி கலீல் ஞாபகார்த்த உரையையும் களனி பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தெல்கஹவத்தகே ராஜ்குமார் சோமதேவ "இலங்கையிலே முஸ்லிம்களின் பின்னோக்கு" எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சிங்களப் பிரிவின் முறைப்பாட்டு அதிகாரி லியனாரச்சி, 'தமிழன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவா இராமசாமி, ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.நூர்தீன், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜாவித் முனவ்வர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட தயாரிப்பாளர் ஷியாமா யாக்கூப் மற்றும் இலங்கை - இந்திய நட்புறவு ஊடகவியலாளர் ஷாஹுல் ஹமீட் ஆகியோர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது மீடியா போரம் கடந்த காலத்தில் மேற்கொண்ட செயற்றிட்ட அறிக்கை உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டது.

நன்றியுரையை போரத்தின் உப செயலாளர் சாதிக் சிஹான் நிகழ்த்தினார்.

# நாட்டை மீளக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு முஸ்லிம் இளைஞர்களது பங்களிப்பும் அவசியம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

இக்பால் அலி



வீழ்ச்சியுற்ற நாட்டை மீளக் கட்டியெழுப்புகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு முஸ்லிம் இளைஞர்களது பங்களிப்பு மிகவும் அவசியமாகும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 73 ஆவது வருடாந்த தேசிய மாநாடு பதுளை கெப்பிட்டல் சிட்டி ஹோட்டலில் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் நேற்றுமுன்தினம் (24) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில், இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் தாரிக் எம்.டி. அரிபுல் இஸ்லாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,முஸ்லிம் மக்கள் எங்களுக்கு முன்மாதிரிமிக்கவர்களாக வாழ்ந்து வருகின்றனர். அன்று வெளிநாட்டவர்கள் கடல் மார்க்கமாக வருகை தந்தபோது சிங்கள அரசர்கள் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள். அப்பொழுது அரபு நாடுகளிலிருந்து வியாபாரம் செய்வதற்காக ஆண்களே வந்தனர். அவர்கள் இந்நாட்டிலுள்ள சிங்கள பெண்களையே திருமணம் செய்துகொண்டனர். உங்களை எங்களில் ஒருவராகவே நாங்கள் மதிக்கின்றோம். அதேபோன்று, முஸ்லிம் மக்கள் வர்த்தக ரீதியான நடவடிக்கைகளின் போது இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு வலுச்சேர்ப்பவர்களாக இருந்து வருகிறார்கள். நாங்கள் அதற்காக மிகவும் பெருமைப்படுகின்றோம்.

முஸ்லிம் மக்கள் வர்த்தக தொழில் துறைசார்ந்தவர்கள் என்ற எண்ணக்கரு மாற்றம் பெற்று இன்று அறிவு ரீதியிலான பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். முஸ்லிம்கள் அனைத்துத் துறைகளிலும் இன்று சிறந்து விளங்குகின்றனர். அதனை நாம் மேலும் விரிவுபடுத்தவேண்டும்.

முஸ்லிம் பெண் பாடசாலை ஒன்றை இந்த மாவட்டத்தில் உருவாக்கியுள்ளேன் என்ற அடிப்படையில் நான் பெருமைப்படுகின்றேன். அல் - அதான் மகா வித்தியாலயத்துக்கு இடைக்கிடையே என்னுடைய பங்களிப்பை நல்கி வருகின்றேன். அப்பாடசாலைக்குத் தேவையான பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுத்து வருகின்றேன்.

அதேபோன்று உங்களது சமூக அமைப்பு விசேடமாக இந்த நாட்டுக்குத் தேவையான இனங்களுக்கிடையே சமாதான சகவாழ்வு தொடர்பில் தெளிவூட்டல்களை ஏற்படுத்த வேண்டும். உலகிலே காணப்படும் மாற்றங்கள் எல்லாவற்றையும் உங்களால் செய்ய முடியாது. எனினும், எங்களுடைய சமூகத்தில் சாதாரண முறையில் சமூக மாற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். விசேடமாக அரசியலுக்குள் சமய ரீதியிலான பிளவுகளை ஏற்படுத்துவதை விட அவற்றை ஒருமுகப்படுத்தி அரசியல் பயணத்தை மேற்கொள்ளுகின்ற நிலையில் முஸ்லிம் மக்களும் முன்வருதல் வேண்டும்.

வீழ்ச்சியுற்ற நாட்டை மீளக் கட்டியெழுப்புகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு முஸ்லிம் இளைஞர்களது பங்களிப்பு மிகவும் அவசியமாகும்.

நான் சமீபத்தில் பங்களாதேஷுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன். அங்கு கடற்றுறை அமைச்சருடன் இந்து கடல் சமுத்திரம் தொடர்பில் கலந்துரையாடிய பின்னர் நாட்டின் பிரதமர் சேஹ் ஹசீனாவை நேரில் சந்தித்து உரையாட வாய்ப்புக் கிடைத்தது. இதன் மூலம் இலங்கை - பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவு ரீதியிலான உறவு மேலும் வலுப்பெறவுள்ளமை முக்கிய அம்சமாகும் என்றும் தெரிவித்தார்.

# மாமனிதர் ரவிராஜின் ஜனனதினம்

சாவகச்சேரி நிருபர்



இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ந.ரவிராஜின் 61ஆவது ஜனனதின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை(25) காலை சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது உருவச்சிலை முன்பாக இடம்பெற்றது.

இதன்போது ரவிராஜின் குடும்ப உறுப்பினர்கள் அன்னாரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

மேற்படி நிகழ்வில் மாமனிதர் ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ், அரசியல் சமூக செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், ரவிராஜின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இதில் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் சிசு மரண வீதம் அதிகரிப்பு

## வெளிநாட்டு பொருளாதார நிபுணர்களின் ஆய்வில் கண்டுபிடிப்பு

வெளிநாட்டு பொருளாதார நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வின் படி இலங்கையில் தற்போது சிசு மரண வீதம் அதிகரித்துள்ளதாகவும் மக்களின் ஆயுட்காலம் குறைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்தக் கணக்கெடுப்பின்படி சிசு இறப்பு விகிதம் அதிகமாக உள்ள நாடுகளுள் இலங்கைக்கு அடுத்தபடியாக சாம்பியா மற்றும் கானா நாடுகள் உள்ளன.

இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படாவிட்டால் சம்பந்தப்பட்ட நாடுகள் பெரும் சிக்கலுக்குள்ளாகும் நிலை ஏற்படும் எனத் தெரிவித்துள்ளது.

இந்நிலைமைக்கு அந்நாடுகளின் அதிக கடன் சுமையே பிரதான காரணமென பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், இலங்கை, சாம்பியா, கானா ஆகிய நாடுகள் சீனாவிடம் கடன் பெற்றுள்ள நிலையில், இந்தப் பிரச்சினைகளில் சீனா உரிய முறையில் தலையிடவில்லை என பெரும்பாலான மேற்குலக நாடுகள் குற்றஞ்சுமத்துவதாகவும் வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கேகாலை,எட்டியாந்தோட்டை, வேவத்தலாவ தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை (15) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19ஆம் திகதி திங்கட்கிழமை நிறைவுபெற்றது. இவ்வுற்சவமானது தோட்ட பொது மக்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் நலன் விரும்பிகளின் உதவியுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய தலைவராக தெரிவு



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய தலைவராக கே.பாலகிருஸ்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாண கிளையின் முன்னாள் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 24ஆம் திகதிமுதல் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 11ம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும்.நோய்,கடன்,எதிரி இவை எதுமே பாதிப்பை ஏற்படுத்தாது.

**ரிஷபம்:** புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும்.மனம் கண்டபடி அலையும்.

**மிதுனம்:** எதிர்ப்பாராத விபத்துகள் ஏற்படலாம். வீடு, வாகனம் விற்பது - வாங்குவது கவனம்.

**கடகம்:** நீங்கள் கேட்காமலேயே நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். துணிச்சலால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

**சிம்மம்:** குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்திகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகும்.

**கன்னி:** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**துலாம்:** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரத்தில் அதிக லாபங்களைப் பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு:** தொழில் மூலமாகப் பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

**மகரம்:** பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப்பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**மீனம்:** கூட்டு வியாபாரத்தில் அதிக லாபம். தடைப்பட்ட திருமணத் திகதி உறுதிப்படுத்தப்படும் நாள்.

**திதி:** அட்டமி பி.இ.2.05 வரை பின் நவமி (வளர்)

**நட்சத்திரம்:** உத்தரம் பி.ப.12.43 வரை பின் அஸ்தம்

**யோகம் :** சித்த யோகம் பி.ப. 12.43 வரை பின் மரண யோகம்

**வார சூலம்:** கிழக்குத் திசை நோக்கி சுபகாரியம் கூடாது.

**நல்லநேரம்:** பி.ப. 11.54– 12.24 மணிவரை

**ராகுகாலம்:** 7.24– 8.54 மணி வரை

**எமகண்டம் :** 10.24– 11.54 மணி வரை

**குளிகை:** 1.24– 2.54 மணி வரை

**சந்திராஷ்டமம்:** கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**தனஅதிஷ்டம்:** பரணி,பூரம்,பூராடம், கார்த்திகை,உத்தரம்,உத்தராடம்(பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்:** உதயத்தில் நடேஷர் அபிஷேகம்.

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739



உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதையம்மன் ஆலயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா விஷேட பூஜை ஒன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (25)கலந்து கொண்டார்.இதன்போது வைரடப்பன்(சுந்தரம்) சம்மாட்டியாரும் கலந்து கொண்டார். (உடப்பு: செய்தியாளர்)

# வாகன விபத்து ஒன்பது பேர் காயம்



யாழ்.கொடிகாமம் - இராமாவில் ஏ -9 வீதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒன்பது பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழிலிருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வேனும் நேருக்குநேர் மோதியே இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் காயமடைந்த 9 பேர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் நால்வர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| 12 - 7XXX | A156A 0011803 | CAR | MITSUBISHI COLT MIRAGE |
| 60 - 7XXX | JADWFR62FL/7100040 | MOTOR COACH | ISUZU JADWFR62FL |
| WP-PG - 1XXX | LGK032K73E9A05608 | DUAL P. VEHICLE | DFSK DFSKV27 |
| NP-DAA - 5XXX | MAT524004FSR02176 | MINI TRUCK | TATA XENON LIGHT TRUCK |
| CP-PP - 7XXX | MA1ZP2GAAA1K61305 | MINI TRUCK | MAHINDRA BOLERO MAXI TRUCK |
| WP-PX - 1XXX | MA1FA2HRRE6A26796 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| WP-PW - 1XXX | MA1FA2HRRD6E28558 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| WP-DAE- 9XXX | MA1FJ2HLWG6C23727 | MINI TRUCK | MAHINDRA SUPRO MAXI TRUCK T6 |
| NW-RE - 7XXX | MF1540004503 | LAND VEHICLE | MASSEY FERGUSON MF 1540 |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2023 ஜூன் 27, 28ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. ஜூன் 29ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2023 ஜூன் 29ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டெண்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டெண்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டெண்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**டெண்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டெண்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டெண்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
தொலைபேசி இல. 0112 000 000

COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூன் 26ஆம் திகதி, திங்கட்கிழமை

# யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத்தின் கோரிக்கைகள் கவனிக்கப்படவேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் தமிழர் விரோத சிங்களமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடிதமொன்றை எழுதியுள்ளது.

துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஊடாக பல்கலைக்கழக பீடாதிபதிகளுக்கு அக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

1. தமிழ் மக்களின் கூட்டு உணர்வுகளோடு தொடர்புடைய தினங்களில் களியாட்டங்கள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதையும் அவற்றை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதையும் தவிரத்தல் மற்றும் அன்றைய தினங்களில் பல்கலைக்கழக நாட்காட்டியில் நிகழ்வுகள் இடம்பெறாமையை உறுதிசெய்தல்.

2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டு இடம் பெறும் மறைமுகமான சிங்களமயமாக்க முயற்சிகளால் தமிழ் மாணவர்களுக்கு பாதிப்புகள் ஏற்படாமையை உறுதிசெய்தல்.

ஆகிய கோரிக்கைகள் மாணவர் ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

''பல்கலைக்கழக நுழைவு என்னும் எந்தப் புள்ளியில் இனப்பிரச்சினை ஆரம்பமாகியதோ அதே புள்ளியில் மீண்டும் வந்து நிற்கின்றோமா?'' என்று எண்ணத் தோன்றுவதாக மாணவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தமிழ் மக்களின் உரிமைப் பயணத்தில் பலமான குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குரலை நசுக்கும் விதமாக பெரும்பான்மையின மாணவர்கள் திட்டமிட்ட வகையில் உள்நுழைக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது மாணவர் ஒன்றியத்தின் அடுத்த குற்றச்சாட்டு.

இவ்வாறானதொரு சூழலில் அவர்கள் பெரும்பான்மையைக் கைப்பற்றுவதன் ஊடாக தமிழ் மாணவர்களுக்குரிய தலைமைத்துவ வாய்ப்புகள் யாவும் ஜனநாயகம் என்ற போர்வையில் பறிக்கப்படுவதற்கான சூழல் எழுந்துள்ளதென்ற மாணவர்களின் கவலையில் ஒரு நியாயம் இருக்கிறது.

இதனால் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கென்றிருக்கும் இறுதியான ஒரேயொரு வாய்ப்பாகவிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இழக்கப்படும் சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வருகிறதா என்று இயற்கையாகவே சந்தேகம் எழுகிறது.

தமிழர் தாயகத்தில் இடம்பெறும் பௌத்த – சிங்களமயமாக்கலுக்கு எதிராக யாழ். பல்கலைச் சமூகம் போராடி வருகையில், விரிவுரையாளர்களே பல்கலையினுள் சிங்களமயமாக்கலை முன்னெடுக்கும் சூழல் உருவாகுமேயானால் அது ஒரு முரணான செயல் என்ற மாணவர்களின் நிலைப்பாடு சரியான ஒன்றாகவே படுகின்றது.

“யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே எமக்கு அநீதி இழைக்கப்படுகிறது. எவரேனும் நீதி தாருங்கள்” என்னும் கையறு நிலைக்கு எமது தமிழ் மாணவர்களை தள்ளிவிட வேண்டாம் என்றும், இவை பொதுவெளியில் மக்கள் மன்றத்திற்குச் செல்ல முன்னர் அவ்வாறான தமிழர் விரோத முயற்சிகளை தடுத்து நிறுத்துமாறும் வேண்டிக் கொள்கிறோம் என்று மாணவர் ஒன்றிய கடிதத்தின் பிரதிகள் பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், அனைத்துப் பீடங்களுக்குமான மாணவர் ஒன்றியங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அண்மையில் கூட தமிழ் மக்களின் உணர்வுகளைப் உதாசீனப்படுத்தி அவமதிக்கும் விதத்தில் நிகழ்வொன்று இராணுவப் பிரசன்னத்தோடு யாழ்.பல்கலையில் இடம்பெற்றிருந்தது. அது தமிழ் மக்களின் ஆறாத மனங்களை மேலும் புண்படுத்தியிருந்ததோடு, பலத்த விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண பல்கலை மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ள விடயங்களை சம்பந்தப்பட்ட தரப்புகள் கவனத்திற்கொள்ள வேண்டும். தரப்படுத்தல், ஜனநாயகம், நல்லிணக்கம் என்ற போர்வையில் செய்யப்படும் மறைமுக சதிச் செயற்பாடுகளுக்கு இடமளித்தல் கூடாது. அது தேவையற்றதும் புதியதுமான பிரச்சினைகளை கொண்டுவரக்கூடும்.

## இன்றைய நாளில்...

- 1803 – கண்டிப் போர்கள்: கண்டியில் சரணடைந்த பிரித்தானியப் படையினர் பெருமளவில் கொல்லப்பட்டனர்.
- 1936 – முதலாவது செயல்முறை ரீதியான உலங்கு வானூர்தி பறக்க விடப்பட்டது.




# புட்டினுடன் சமாதானமா? 'கிளர்ச்சி' செய்ய முயன்ற வாக்னர் தலைவர் பின்வாங்கியது ஏன்?

ரஷ்ய ஆதரவு கூலிப்படையான வாக்னர் அந்நாட்டிற்கு எதிராகவே திரும்பியது, உக்ரேன் போரில் திடீர் திருப்பமாக அமைந்தது. ஆனால், தற்போது வாக்னர் தலைவர் தனது முடிவிலிருந்து பின்வாங்கியுள்ளார். ஜனாதிபதி புட்டினுடன், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அவர் உடன்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

முன்னதாக உக்ரேனில் இருந்து ரஷ்ய எல்லைக்குள் நுழைந்துவிட்டதாக கூறப்பட்ட இந்த கூலிப்படையினர், ரஷ்யாவின் தென் பகுதியிலுள்ள முக்கிய நகரம் ஒன்றைக் கைப்பற்றியதாகவும் தகவல்கள் வெளியாயின.

அதைத் தொடர்ந்து, அங்கிருந்து தலைநகர் மொஸ்கோ நோக்கி அணிவகுக்கத் தயாராக இருப்பதாகவும் அதன் தலைவர் பிரிகோஷின் தெரிவித்திருந்தார். ஆனால், அதன் பின், அந்த முடிவைக் கைவிட்டு, தனது படைகளை பின்வாங்குமாறு உத்தரவிட்டார்.

உக்ரேனில் ஓராண்டுக்கும் மேலாக நீடிக்கும் போரில் ரஷ்யாவுக்கு உறுதுணையாக களத்தில் நின்ற அதன் ஆதரவுக் கூலிப்படையான வாக்னர் திடீரென ரஷ்யாவுக்கு எதிராகவே திரும்பியது. ஜூன் 23 அன்று இரவு, அந்த கூலிப்படையினர் உக்ரேன் எல்லையைக் கடந்து ரஷ்யாவுக்குள் நுழைந்து, ரோஸ்டோவ் - ஆன் - டான் நகரில் புகுந்து, அங்குள்ள ரஷ்யாவின் தெற்கு பிராந்திய இராணுவ தலைமை அலுவலகத்தை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டனர்.

கருங்கடல் ஓரத்தில் அமைந்துள்ள ரோஸ்டோவ் - ஆன் - டான் நகரில் இருந்து வாக்னர் கூலிப்படையினர் மாஸ்கோ நோக்கி அணிவகுப்பதாக பிரிட்டன் பாதுகாப்புத்துறை உள்ளிட்ட பல தரப்புகளில் இருந்தும் தகவல்கள் கசிந்தன. வோரோனேஸ் நகரை உள்ளடக்கிய பரந்து விரிந்த வோரோனேஸ் ஓப்ளாஸ்ட் பிராந்தியத்தின் வழியே அப்படையினர் மாஸ்கோ நோக்கிச் செல்வதாகக் கூறப்பட்டது. இந்நகரம் மாஸ்கோவில் இருந்து 482 கி.மீ. தெற்கே இருக்கிறது.

ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் தன்னைச் சந்திக்காவிட்டால் மாஸ்கோ நோக்கி அணிவகுத்துச் செல்லப் போவதாக வாக்னர் குழுவின் தலைவர் யெவ்ஜெனி ப்ரிகோஜின் மிரட்டல் விடுத்திருந்தார்.

புட்டினுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய முயற்சி - பின்வாங்கிய வாக்னர் படை

இந்த நிலையில் ரஷ்யா முழுவதும் பதற்றம் நிலவிய சூழலில், வாக்னர் படையின் தலைவர் யெவ்ஜெனி ப்ரிகோஜின் ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரஸுக்கு செல்வதாக ரஷ்ய அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கடந்த சனிக்கிழமையன்று, வாக்னர் குழு ரஷ்ய நகரமான ரோஸ்டோவ்-ஆன்-டானை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. அவர்களது நடவடிக்கையை 'கிளர்ச்சி' எனப் பிரகடனப்படுத்தி, அவர்கள் மாஸ்கோவை நோக்கி அணிவகுத்து முன்னேறினர்.

ஆனால், இரவு நேரத்தில் தனது அணிவகுப்பை நிறுத்திய ப்ரிகோஜின், தனது படையினருடன் தங்கள் தளத்திற்குத் திரும்பினார்.

ரஷ்யா 24 செய்திச் சேனலின்படி, பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ, எவ்ஜெனி ப்ரிகோஜின்வுடன் பேசினார். அதற்குப் பிறகு ப்ரிகோஜின் தனது தளத்திற்கு திரும்பியதாக கூறப்படுகிறது.

அந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, ப்ரிகோஜின் தனது படையினரின் அணிவகுப்பை நிறுத்தவும் ரஷ்யாவில் நிலைமை மோசமடைவதைத் தடுக்கவும் ஒப்புக்கொண்டார்.

லுகாஷென்கோவின் அறிக்கையை மேற்கோள் காட்டி, ரஷ்யா 24 செய்தி சேனல், மாஸ்கோவை நோக்கிய அணிவகுப்பைப் பாதி வழியில் நிறுத்துமாறும் லுகாஷென்கோ கூறியதை ப்ரிகோஜின் ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிட்டது. தங்களுக்கான பாதுகாப்பு குறித்த உத்தரவாதங்களுடன் நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்கு வாக்னர் கூலிப்படையின் வீரர்களால் முடியும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அந்த செய்தி சேனலின்படி, புட்டினும் இந்தத் தீர்வுக்கு ஒப்புக்கொண்டார்.

மொஸ்கோவை நோக்கிய அணிவகுப்புக்கு முன்பு, ப்ரிகோஜின் தனது நோக்கம், “ஆட்சிக்கவிழ்ப்புக்கான இராணுவ சதி அல்ல, இது நீதிக்கான அணிவகுப்பு” என்று கூறியிருந்தார்.

புட்டினுடன் சமாதானம் செய்ததால் வாக்னர் படை தலைவருக்கு என்ன கிடைத்தது?

நாள் முழுவதும் நீடித்த பேச்சுவார்த்தையின் விளைவாக, யெவ்ஜெனி ப்ரிகோஜின் நேற்று இரவு நேரத்தில் வாக்னர் படையின் கிளர்ச்சியை நிறுத்திக்கொள்ள ஒப்புக்கொண்டார்.

புட்டினின் நெருங்கிய கூட்டாளியான பெலாரஸின் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ, சனிக்கிழமையன்று ப்ரிகோஜினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ப்ரிகோஜின் பெலாரஸ் செல்ல அனுமதிக்கப்பட்டார். மேலும், அவர் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் கைவிடுவதாக ரஷ்யா ஒப்புக்கொண்டது.

புட்டினின் சம்மதத்துடன்தான் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக லுகாஷென்கோவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, வாக்னர் குழுவின் தலைவருக்கு எதிரான வழக்கை கைவிட கிரெம்ளின் ஒப்புக்கொண்டது. அத்தோடு, வாக்னர் படையின் வீரர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

ப்ரிகோஜின் மற்றும் அவரது படையினருக்கு வேறு என்னவெல்லாம் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது என்று இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. படையெடுப்பின் தொடக்கத்தில் இருந்து உக்ரேன் மீது தாக்குதல்களை நடத்த பெலாரஸின் பிரதேசத்தை ரஷ்யா பயன்படுத்தி வருகிறது. படையெடுப்பின் தொடக்கத்திலிருந்து உக்ரைன் மீது தாக்குதல்களை நடத்த பெலாரஸின் பிரதேசத்தை ரஷ்யா பயன்படுத்தி வருகிறது.

அதிகாரத்தின்மீது புட்டினின் பிடி பலவீனமாக இருப்பதாகக் காட்டும் எந்தவொரு அறிகுறியும், ரஷ்யாவை பெரிதும் நம்பியிருக்கும் லுகாஷென்கோவின் ஆட்சிக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என்பது குறிப்பிடத்தகுந்த விஷயம்.

வாக்னர் படையை வாஞ்சையோடு வழியனுப்பினர் ரஷ்ய மக்கள். வாக்னர் கூலிப்படையின் வீரர்கள், ரோஸ்டோவ் நகரிலிருந்து திரும்பும்போது உள்ளூர் மக்கள் அவர்களைக் கட்டியணைத்து பிரியாவிடை கொடுப்பதை, புகைப்படங்களில் காண முடிந்தது.

சமூக ஊடக தளமான ட்விட்டரில் பரவி வரும் ஒரு வீடியோவில், வாக்னர் வீரர் ஒருவர் வானத்தை நோக்கி சுடுகிறார். வாக்னர் குழுவின் வீரர்கள் ரோஸ்டோவில் இருந்து வெளியேறும்போது அந்த வீரர் வானத்தை நோக்கிச் சுடுவது அந்த வீடியோவில் தெரிகிறது.

அவர்கள் திரும்பிச் செல்லும்போது தெருக்களில் வரிசையாக நின்றிருந்த பொதுமக்கள், அந்த வீரர்களைக் கைதட்டி உற்சாகப்படுத்துவதைக் கேட்க முடிகிறது. கடந்த சில மணிநேரங்களில் தெற்கு நகரமான ரோஸ்டோவில் இருக்கும் பொதுமக்கள் வாக்னர் படையினருக்கு ஆதரவளிக்கும் பல வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

ரோஸ்டோவ் - ஆன் - டானில் உள்ள இராணுவ தலைமையகத்திலிருந்து வாக்னர் படை வெளியேறும்போது, பொதுமக்கள் “வாக்னர்! வாக்னர்!” என்று கோஷமிட்டு அவர்களுக்குத் தங்கள் ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்தனர். இரவு நேரத்தில் வாக்னர் வெளியேறும்போது, நகர மக்கள் பலரும் சாலைகளில் திரண்டு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

அவர்கள் உக்ரேனில் வாக்னர் வீரர்கள் போரிட்டதற்காக தங்கள் ஆதரவைக் காட்டுகிறார்களா அல்லது கைவிடப்பட்ட கிளர்ச்சிக்குத் தங்கள் ஆதரவைக் காட்டுகிறார்களா என்பது தெளிவாக இன்னும் உறுதியாகவில்லை.

### வாக்னர் கிளர்ச்சி, விளாதிமிர் புட்டினுக்கு மிகவும் ஆபத்தானதா?

வாக்னர் கிளர்ச்சி ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புட்டினுக்கு மிகவும் அபாயகரமானது என்று விவரிக்கிறார் பி.பி.சி. ரஷ்ய சேவையின் ஆசிரியர் ஸ்டீவ் ரோசென்பெர்க்.

“இவ்வளவு காலம் ஆட்சியில் இருக்கும் ஒருவர், தான் யாராலும் வெல்ல முடியாத நபர் என்று நினைக்கலாம். எந்தப் பிரச்சினையையும் சமாளிக்க முடியும் என்று நினைக்கலாம். ஆனால், 16 மாதங்களுக்கு முன்பு, 'ரஷ்யாவை பாதுகாப்பானதாக்க சிறப்பு இராணுவ நடவடிக்கையை' உக்ரேனில் ஜனாதிபதி புட்டின் தொடங்கினார்.

ஆனால், சமீபத்திய மாதங்களில் கிரெம்ளின் மீது டிரோன் தாக்குதல்கள், மேற்கு ரஷ்யாவில் ஷெல் தாக்குதல்கள் நடந்துள்ளன.

இப்போது, மாஸ்கோவை நோக்கிச் சென்று, பிறகு அந்த முடிவைத் திரும்பப் பெற்ற ஆயுதமேந்திய கூலிப்படையின் கிளர்ச்சி நடந்துள்ளது. விளாதிமிர் புட்டினால் நியமிக்கப்பட்ட ஒரு பாதுகாப்புத்துறை அமைச்சரை நீக்க வேண்டும் வாக்னர் படை கேட்டுக்கொண்டது.

இது ஜனாதிபதி விளாதிமிர் புட்டினுக்கு மிகவும் ஆபத்தான தருணம் என்று விவரிக்கிறார் ஸ்டீவ் ரோசென்பெர்க்.

### வாக்னர் VS ரஷ்ய இராணுவம் பலம் என்ன?

உக்ரேனில் ரஷ்ய இராணுவத்துடன் தோளோடு தோள் நின்று போரிட்ட கூலிப்படையே வாக்னர் குரூப் ஆகும்.

ப்ரிகோஜின் தனது வீடியோ பதிவில் குறிப்பிட்டவாறு, அந்த குழுவில் சுமார் 25 ஆயிரம் வீரர்கள் இருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறை கணிப்பின்படி, கடந்த ஜனவரியில் வாக்னர் குழுவில் அதிகபட்சமாக 50 ஆயிரம் வீரர்கள் வரை இருந்தனர். ஆனால், அவர்களில் சுமார் 20 ஆயிரம் பேர் உக்ரேன் போரில் கொல்லப்பட்டுவிட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

வாக்னர் குழுவின் பலம் 25,000 வீரர்கள் எனும் போது, ரஷ்ய இராணுவத்திற்கோ 8 இலட்சம் வீரர்கள் எப்போதும் தயார் நிலையில் இருக்கிறார்கள்.

ரஷ்ய துருப்புகளின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில், போரில் 2.2 இலட்சம் வீரர்கள் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### மொஸ்கோவில் நிலவிய பதற்றம்

முன்னதாக வாக்னர் படைகள் மாஸ்கோ நோக்கி அணிவகுப்பதாக கூறப்பட்டதால், ரஷ்யாவில் உச்சக்கட்டப் பதற்றம் நிலவியது. இதனால் மொஸ்கோ நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

இதேபோல், ரஷ்யாவின் இரண்டாவது பெரிய மற்றும் மிக முக்கிய நகரான செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரிலும் இராணுவ பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. அங்குள்ள வாக்னர் தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை ரஷ்ய அதிகாரிகள் சோதனையிட்டதாக் கூறப்படுகிறது. அங்கே, இராணுவ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### ரஷ்ய இராணுவ தலைமையகத்திற்கு வெளியே ஆயுதம் தரித்த வீரர்கள்

உக்ரேன் போரில் முக்கிய முடிவுகளை எடுக்கும் மையமாக திகழ்ந்த, ரோஸ்டோவ் - ஆன் - டான் நகரில் உள்ள இராணுவ தலைமையகத்திற்கு வெளியே ஆயுதங்களுடன் வீரர்கள் காவல் காக்கும் வீடியோக்கள் இணையதளங்களில் வெளியாகின.

அவர்கள் இராணுவ தலைமையகத்தை பாதுகாக்கும் ரஷ்ய ராணுவ வீரர்களா அல்லது வாக்னர் கூலிப்படையினரா என்பதில் குழப்பம் நீடிக்கிறது.

அந்த வீடியோக்களில் காட்டப்படும் கட்டடம் ரோஸ்டவ் - ஆன் - டான் நகரில் பதிவு செய்யப்பட்டவை என்பதை பி.பி.சியால் உறுதிப்படுத்த முடிந்தது.

அடுத்தடுத்து திருப்பங்கள் அரங்கேறி வரும் வேளையில், அந்த நகரில் மக்களின் இயல்பு வாழ்க்கை அப்படியே நீடிக்கிறது.

### 25,000 பேர் சாகத் தயார் - ப்ரிகோஜின்

இதற்கு முன்னதாக வாக்னர் தலைவர் யெவ்ஜெனி ப்ரிகோஜின் தனது டெலிகிராம் பக்கத்தில் பதிவிட்ட பதிவில், ரஷ்ய இராணுவத்திற்கு எதிராக திரும்புவதால் வாக்னர் குழுவில் உள்ள அனைவருமே சாகவும் தயாராக இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

“நாங்கள் அனைவரும் சாகத் தயாராக இருக்கிறோம். நாங்கள் 25,000 மற்றும் கூடுதலாக 25,000” என்று அவர் அந்த ஓடியோ பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கெய் ஷோய்கு மற்றும் வலேரி கெரசிமோவை சந்திக்க அனுமதி வழங்கப்படாவிட்டால், தலைநகர் மொஸ்கோ நோக்கி சுமார் 1,600 கி.மீ. தூர அணிவகுப்புக்கு தனது படைகள் தயாராக இருப்பதாகவும் அவர் அப்போது மிரட்டல் விடுத்திருந்தார்.

ப்ரிகோஜின் பேச்சு அடங்கிய 2 வீடியோக்களும் ரோஸ்டவ் - ஆன் - டான் நகரில் உள்ள ரஷ்ய இராணுவ தலைமையகத்திற்குள் பதிவுசெய்யப்பட்டவை என்று கூறப்படுகிறது.

அதனை தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்த பி.பி.சி. முயற்சி செய்து வருகிறது.

### மாஸ்கோவை விட்டு தனி விமானத்தில் வெளியேறினாரா புட்டின் ?

முன்னதாக ரஷ்யாவில் இராணுவத்துடன் மோதத் துணிந்த வாக்னர் கூலிப்படையினர் மாஸ்கோ நோக்கி அணிவகுப்பதாக செய்தி வெளியானதால், ரஷ்யாவில் உள்நாட்டுப் போர் வெடிக்குமோ என்று உச்சக்கட்டப் பதற்றம் நிலவி வந்தது. இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் சிறப்பு விமானத்தில் தலைநகர் மொஸ்கோவை விட்டு வெளியேறிவிட்டதாக சமூக வலைதளங்களில் பலரும் பதிவிட்டு வந்தனர்.

ரஷ்யாவில் அதிபர் புட்டினுக்கான சிறப்பு விமானமான Il-96-300 PU, மொஸ்கோவில் இருந்து, அங்குள்ள நேரப்படி நேற்று முன்தினம் பிற்பகல் 2.16 மணியளவில் புறப்பட்டு வடமேற்குத் திசையில் சென்றுவிட்டதாக விமானங்களின் பாதையை பின்தொடரும் FlightRadar சேவை தரவுகளை சுட்டிக்காட்டி சிலர் பதிவுகளை வெளியிட்டிருந்தனர்.

மொஸ்கோவுக்கு வடமேற்கே உள்ள த்வெர் நகருக்கு அருகே, புட்டின் பயணித்த சிறப்பு விமானம் அந்த கண்காணிப்பு கட்டமைப்பில் இருந்து மறைந்துவிட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர். ஆனால், அந்த சிறப்பு விமானத்தில் புட்டின் இருந்தாரா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும், புட்டின் தலைநகர் மொஸ்கோவில் நிரந்தரமாக வசிப்பதில்லை. மொஸ்கோவுக்கு வடமேற்கே அமைந்துள்ள வால்டாய் ஏரியில் உள்ள தனது பரந்து விரிந்த இல்லத்தில்தான் அதிக நேரத்தை செலவிடுவார்.

### வாக்னரை எச்சரித்த புட்டின்

ரஷ்யாவின் இராணுவத் தலைமைக்கு எதிராக வாக்னர் குழு போர்க்கொடி தூக்கிய பிறகு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில், அனைத்து படைகளும் ஒருங்கிணைந்து இருக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். நடந்த நிகழ்வுகள் ஒரு துரோகம் என்றும், ரஷ்ய மக்களை முதுகில் குத்தும் செயல் என்றும் புட்டின் வாக்னரை சாடியிருந்தார். “இது முதுகில் குத்தும் செயல். இந்த மாதிரியான அச்சுறுத்தல்களில் இருந்து தேசத்தைக் காப்பதற்கான எங்களது நடவடிக்கை தீவிரமானதாக இருக்கும். துரோகப் பாதையில் இறங்கி தீவிரவாதத்தை கையில் எடுத்தவர்கள், நிச்சயம் தண்டனையை அனுபவிப்பார்கள்” என்றும் பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியிருந்தார் புட்டின் .

புட்டினுக்கு மிகவும் நெருக்கமான, அவருக்கு விசுவாசமான சகாவாக வலம் வந்த ப்ரிகோஜின், ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் சமையல் ஒப்பந்தங்களை பெற்றதன் மூலம் புட்டினின் சமையல்காரர் என்று வர்ணிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ரஷ்யாவுக்கு எதிராக வாக்னர் கூலிப்படை திரும்பியது ஏன்?

உக்ரேன் போர்க் களத்தில் ரஷ்ய இராணுவத்தின் பின்னடைவுக்கும், அதிக உயிரிழப்புகளுக்கும் பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் ஷொய்குவே காரணம் என்று ப்ரிகோஜின் மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

“இந்த போர் தேவைப்பட்டது. அதன் மூலம் இரண்டாவது நாயகனாக அவர் உருவெடுக்க முடிந்தது. உக்ரேனை நாஜிமயமாகாமல் தடுப்பதற்கோ, இராணுவமயமாக்கலை கட்டுப்படுத்துவதற்கோ இந்த போர் நடக்கவில்லை. ஒரு கூடுதல் நட்சத்திரத்திற்காகவே இந்த போர் தேவைப்பட்டது” என்றார் ப்ரிகோஜின். இது உக்ரேன் மீதான தாக்குதலைத் தொடங்க ரஷ்யா முன்வைத்த காரணங்களுக்கு முரண்பாடாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வார தொடக்கத்தில் உக்ரேனில் உள்ள வாக்னர் கூலிப்படையின் தளம் ஒன்றை ரஷ்ய இராணுவம் தாக்கியதாக ப்ரிகோஜின் குற்றம்சாட்டியிருந்தார். ஆனால், இதற்கு ரஷ்ய பாதுகாப்புத்துறை மறுப்பு தெரிவித்திருந்தது.

நன்றி - பி.பி.சி

## நக்கல் நமசிவாயம்



# 'தமிழன்' மூன்றாண்டு நிறைவு நிகழ்வில்...







'தமிழன்' பிரதி ஆசிரியர் நிர்ஷன் இராமானுஜம்



நிறுவனத் தலைவர் திலித் ஜயவீர



டலஸ் அழகப்பெரும எம்.பி.



வே.இராதாகிருஷ்ணன் எம்.பி.



சுமந்திரன் எம்.பி.



உதயகுமார் எம்.பி.



எச்.எம்.எம்.ஹாரிஸ் எம்.பி.



வேலுகுமார் எம்.பி.



இம்ரான் மஹ்ரூப் எம்.பி.



பணிப்பாளர் மாதவ மடவல



காரைக்கவி கந்தையா



புரவலர் ஹாஷிம் உமர்



பிரதம நிறைவேற்று
அதிகாரி விஜித் சந்திரசேன



'தமிழன்' பிரதம ஆசிரியர் சிவா இராமசாமி



நாட்டிய பூரண கலாநிதி நிர்மலா ஜோன்



பேராசிரியர் விஜேசந்திரன்



செல்வி வைஷாலினி யோகராஜன்



பாவேந்தர் பாலமுனை பாருக்



பேராசிரியர் விஜேசந்திரன்



நாட்டிய பூரண கலாநிதி நிர்மலா ஜோன்























பல்துறை கலைஞர்களான சிரேஷ்ட எழுத்தாளர் மானா மக்கீன், சிரேஷ்ட ஊடகவியலாளர் இராதா மேத்தா, கண்ணகி கலாலயம் முத்துக்குமார், ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஸாஹிர் ஆகியோர் 'தமிழன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவா இராமசாமியை பொன்னாடை போர்த்தி கௌரவித்தபோது...





# 'தமிழன்' மூன்றாண்டு நிறைவு நிகழ்வில்...







அபிநய ஷேத்ரா, தேஜஸ்வரா கலாலய மாணவர்கள் மற்றும் நாட்டிய சூரத்தா ஜெகநாதன் சஞ்சீவன் ஆகியோர்



















வடிவேல் சுரேஸ் எம்.பி



















'தமிழன்' பத்திரிகையின் பணியாளர்கள் குழாம்

படப்பிடிப்பு:- சமன் அபேசிறிவர்தன, எம்.நஸார்

# இரு கப்பல்களின் விபத்துகள் குறித்து விரிவான விசாரணைக்கு ஏற்பாடு

## பாராளுமன்ற விசேட குழு தீர்மானம்



எக்ஸ்பிரஸ் பேர்ள், நியூ டயமண்ட கப்பல் விபத்துகள் தொடர்பில் விரிவான விசாரணையை நடத்துவதற்கு பாராளுமன்ற விசேட குழு தீர்மானித்துள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள், நியூ டயமண்ட கப்பல் விபத்துகள் தொடர்பில் விரிவான விசாரணையை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சாட்சிகளைப் பெற்றுக்கொள்ள இலங்கை கடற்பரப்பில் நிகழ்ந்த குறித்த கப்பல்கள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கு பாராளுமன்ற விசேட குழு அண்மையில் தீர்மானித்தது.

இதற்கிணங்க அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் இந்த விசேட குழு முதல் தடவையாக கடந்த 20ஆம் திகதி கூடியது.இதன்போதே மேற்படி விடயம் தீர்மானிக்கப்பட்டது. இதன்போது குழுவின் எதிர்கால செயற்பாடுகள் குறித்த அடிப்படை விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

எக்ஸ்பிரஸ் பேர்ள், நியூ டயமண்ட கப்பல்கள் விபத்துகள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்தல், சுற்றுச்சூழல் பாதிப்புகள், ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா, அது தொடர்பில் அரச பொறிமுறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளதாகக் குழுவின் தலைவர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இங்கு தெரிவித்தார். எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கும் அவ்வாறான அவசர நிலையை எதிர்கொள்வதற்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தக் குழு பரிந்துரைகளை வழங்கும் என்றும் தலைவர் தெரிவித்தார்.

குழுவின் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துகளைப் பெறுவதற்கும் அது தொடர்பான பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்கும் இரண்டு வார கால அவகாசம் வழங்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்த விசேட குழுவை எதிர்வரும் 27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குக் கூட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம், கலாநிதி சரத் வீரசேகர, நிரோஷன் பெரேரா, நிமல் லான்சா, அகில எல்லாவல, நாலக பண்டார கோட்டேகொட, சட்டத்தரணி மதுர விதானகே, பாராளுமன்ற சட்டவாக்கத் திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்களப் பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகாந்த சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நுகர்வோர் சட்டத்தில் மாற்றம் செய்ய நடவடிக்கை



## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு

பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் 20 வருடங்கள் பழமையான நுகர்வோர் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ளவிருப்பதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டுக்கு அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் சலுகைகளைப் பெற்றுக்கொண்ட பின்பும் அச்சலுகைகளின் நலன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்காத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் நாட்களில் உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களினதும் விலை காட்சிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யாத நிறுவனங்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றபோது நாடு பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருந்தது. அவ்வாறான சந்தர்ப்பத்திலேயே நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான அமைச்சு ஒன்றை எனக்கு வழங்கினார். அப்போது நாட்டுக்குள் சில உணவுப் பொருட்கள் இரண்டு நாட்களுக்கே போதுமான தகவல் இருந்தன. விவசாயத் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவுக்கு அரிசி இறக்குமதி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. கடந்த அரசாங்கத்தின் உரக் கொள்கையே உணவுத் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி உரிய வகையில் நடைமுறைப்படுத்தினார். அந்த வகையில் ஜனாதிபதியின் சரியான நடவடிக்கையின் காரணமாக எதிர்வரும் நாட்களில் அரிசி இறக்குமதிக்கான அவசியம் இல்லாமல் போகும். அதனால் அரிசி இறக்குமதிக்காக செலவிடப்பட்ட 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு மீதமாகும். அவ்வாறு மீதமாகும் பணத்தைக் கொண்டு ஏனைய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு கிட்டும்.

தற்போது பொருட்களின் இறக்குமதி செயற்பாடுகள் சிறந்த முறையில் இடம் பெறுகின்றன. நிறுவனங்களுக்கு அவசியமான கடன் பத்திரங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளும் வலுவாக முன்னெடுக்கப்படுகின்றன. வர்த்தகச் சந்தையில் நிலைமை சுமுகமாக மாறியிருந்தாலும் பொருட்களின் விலைகள் இன்னும் ஏன் குறையவில்லை என்பதே மக்களின் கேள்வியாக உள்ளது. ஒக்டோபர் மாதமளவில் பொருளாதார வளர்ச்சியை தனிப் பெறுமானத்துக்கு கொண்டு வருவதற்கான இயலுமை கிட்டும் என்ற நம்பிக்கை உள்ளது.

அரசாங்கத்தினால் குறைக்கப்படும் பொருட்களின் விலைகளை எதிர்வரும் நாட்களில் குறைக்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தரை, சுவரோடுகள் மற்றும் குளியலறை சாதனங்கள் போன்றவைகளுக்கான குறைந்தபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.அத்தோடு விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களுக்குமான குறைந்தபட்ச சில்லைறை விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அவசியமான சூழல் தற்போது உருவாகியுள்ளது என்றும் தெரிவித்தார்.








புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு ஹாஷிம் உமர் அறக்கட்டளை வறிய மக்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கியது. கொழும்பு 9 அகில இலங்கை வை. எம். எம். ஏ . பேரவையின் கேட்போர் கூடத்தில் பேரவையின் பெண்கள் பிரிவுத் தலைவி பவாஸா தாஹா தலைமையில் நேற்று (25) இந்நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் அறக்கட்டளையின் தலைவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர், பாரியார் மரியம் ஹாஷிம் உமர் ஆகியோர் பிரதம அதிதிகளாக பங்கேற்று பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினர்.இவ்வைபத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# வடக்கு கடலை ஆக்கிரமிக்கும் கடலட்டைப் பண்ணைகள்

## மெசிடோ நிறுவனத்தின் உத்தியோகத்தர் விவேகி சீற்றம்



வடக்கு கடலின் ஆழம் குறைந்த பகுதிகளை சீனாவின் பினாமி நிறுவனங்கள் கடலட்டைப் பண்ணைகளுக்காக ஆக்கிரமிக்குமானால் எதிர்கால சந்ததியினருக்கு மீன்களை கண்காட்சிகளினூடாக காண்பிக்கவேண்டிய நிலைமை ஏற்படும் என மெசிடோ நிறுவனத்தின் உத்தியோகத்தர் விவேகி தெரிவித்தார்.

உலக வங்கியின் அறிக்கை தொடர்பாக கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை(24) இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் வளமான கடற் பகுதிகளில் கடல் வேளாண்மை என்ற போர்வையில் கடலட்டை பண்ணைகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

இந்நிலையில் பாரம்பரியமாக கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில் மாற்றுத் தொழில்களுக்கு செல்ல வேண்டிய துப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் மீனினங்கள் இனப்பெருக்கம் செய்ய முடியாதளவுக்கு கடல்பகுதி சேற்றுக் கடலாக மாறியுள்ளது. இதனால் எமது எதிர்கால சந்ததியினர் மீனினங்களை காண முடியாத அபாயநிலை உருவாகும்.

தற்போது அலங்கார மீன்கள் கண்காட்சிக்காக வைக்கப்படுவது போன்று நாம் பாரம்பரியமாக கடல் உணவாக உண்டு வந்த மீன்களையும் கண்காட்சிகளினுடாகவே எமது எதிர்கால சந்ததியினருக்கு காட்சிப்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படப்போகிறது.

மீன், கருவாட்டு உற்பத்தியில் பிரசித்திபெற்ற மன்னார் மாவட்டத்தில் கோழிகளுக்கு உணவாக போடுகின்ற மண்டத்திரலி மற்றும் செங்கன்னியை உணவு தேவைக்காக இன்று மக்கள் பயன்படுத்துகின்றனர்.

அது மட்டுமல்லாது சீனாவில் இருந்து பிளாஸ்ரிக் முட்டைகள் இறக்குமதி செய்யப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் சீனா செயற்கை மீன்களையும் உணவுக்காக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிறது.

வடக்கில் இயற்கையாகக் மீன் இனங்கள் கிடைக்கும் கடற் பகுதிகளை ஆக்கிரமித்து தனது நாட்டுக்குத் தேவையான அட்டைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதால் எமது மக்கள் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களையே உணவாக உட்கொள்கின்றனர்.

இயற்கை நீரோட்டங்களை மறித்து கடல் அட்டைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு வருவதால் மீன் இனப்பெருக்கம் குறைவடைந்துள்ள நிலையில் பிடிபடும் மீன்கள் வெளிநாடுகளுக்கும் ஆடம்பர விடுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

ஆகவே, எமது கடல் வளத்தை அழிக்க இலங்கையர்கள் இடம் கொடுக்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வறிய குடும்பங்களுக்கான உதவித் தொகையை தடையின்றி வழங்குக!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

வறிய குடும்பங்களுக்கான உதவித் தொகையை தடையின்றி வழங்க அரசாங்கம் முன்வர வேண்டுமென வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ரணில் அரசாங்கமானது நாட்டின் தேவைக்கதிகமாக இருக்கும் இராணுவத்தினருக்கு வழங்கும் சம்பளத்தை விட மேலதிகமாக சலுகைகளையும் வழங்கியுள்ளது.

யுத்தம் இல்லாத இந்நாட்டில் பொருளாதாரம் மிக அதலபாதாளத்தில் தள்ளளப்பட்டிருக்கின்றபோது வரவு - செலவுத் திட்டத்தில் மிக அதிகமான நிதியை பாதுகாப்புத்துறைக்காக ஒதுக்கீடு செய்துள்ளதுடன் மேலதிகமாக பல சலுகைகளையும் வழங்கியுள்ளது. இந்நிலையில், தமிழர் தாயகத்தில் குறிப்பாக, யாழ். குடாநாட்டில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் படைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இப்படையினர் ஏன், எதற்கு நிறுத்தப்பட்டுள்ளனர் என்ற கேள்விக்கு இதுவரை அரசாங்கத்திடம் சரியான பதில் கிடையாது.

இவ்வாறு படைகளுக்கு சலுகைகளை அதிகரித்த ரணில் அரசாங்கம் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சிறு உதவித் தொகையை கியூ ஆர் என்ற முறைமையைக் கொண்டுவந்து பறித்துள்ளது.

வருமானம் குறைந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக படையினருக்கு சலுகைகளை வழங்கியுள்ளது. இந்நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவித் தொகையை தடையின்றி வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

பெரியவிளான் பகுதியில் மின்சாரம் தாக்கி 60 வயதுப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலுள்ளவர்கள் வெளியே சென்றிருந்த நிலையில், குறித்த பெண் தண்ணீர் இறைப்பதற்கு மோட்டார் இயந்திரத்தை இயக்க முற்பட்டபோதே மேற்படி அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

செந்தில்நாதன் செந்தமிழ்ச்செல்வி (வயது 60) என்ற பெண்ணே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்றவருக்கு பிணை

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக மருதங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் ஒன்று நேற்றுமுன்தினம் மருதங்கேணி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் கைதுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும், கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரம் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.












யாழ்ப்பாணம் – புங்குடுதீவு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று(25) காலை இடம்பெற்றது.

# நிகழ்நிலை கற்றலின் பாதகத்தன்மை தொடர்பாக மாணவர்களுக்கிடையிலான போட்டி நிகழ்வு

கல்லடி செய்தியாளர்




நிகழ்நிலை ஊடாக கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு ஏற்படுகின்ற சாதகம் மற்றும் பாதகத்தன்மை தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தும் போட்டி நிகழ்வு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள பாவக்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலத்தில் வியாழக்கிழமை (22) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் இயங்கி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான ஏ யு லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மண்முனை மேற்கு பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடத்திய மாணவருக்கிடையிலான விவாதப் போட்டியில் உன்னிச்சை எட்டாம் கட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் பாவக்கொடிசேனை விநாயகர் வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மதிராஜ், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் நிஷா ரியாஸ், ஏ யு லங்கா நிறுவன சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் நந்தகுமார் மற்றும் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 33ஆவது தியாகிகள் தின நினைவேந்தல்






கனகராசா சரவணன்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 33ஆவது நினைவஞ்சலி மட்டக்களப்பில் சனிக்கிழமை(24) அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதித் தலைவருமான இரா.துரைரெட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உபதலைவர் பொன்.செல்லத்துரை(கேசவன்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், உயிர்நீத்தவர்களின் உறவுகள் மற்றும் பிரதேச அமைப்பாளர்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

படுகொலை செய்யப்பட்ட பத்மநாபாவின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வை.எம்.எம்.ஏ. பேரவையின் சிறந்த மாவட்ட பணிப்பாளருக்கான விருது றியாஸுக்கு

அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் 2022 /2023 காலப்பகுதிக்கு சிறந்த மாவட்டப் பணிப்பாளருக்கான விருது பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸுக்கு வழங்கப்பட்டது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் 73ஆவது வருடாந்த மாநாடு சனிக்கிழமை(24) பதுளை வங்கி வீதியிலுள்ள Crystal Auditorium Capital City Hotel நடைபெறவுள்ளது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் நாடு முழுவதும் 170க்கும் மேற்பட்ட அங்கத்துவக் கிளைகள் மூலம் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கலந்து கொண்டு விருதினை எம்.ஐ.எம்.றியாஸுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கௌரவ அதிதிகளாக இலங்கைக்கான பங்களாதேஷ் நாட்டின் தூதுவர் முகம்மட் அஷ்ரபுல் இஸ்லாம், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் 73ஆவது வருடாந்த மாநாட்டில் தேர்தல் மூலம் மீண்டும் தேசியத் தலைவராக இஹ்சான் ஏ.ஹமீட் தெரிவு செய்யப்பட்டார். பேரவையின் ஐந்து உப தலைவர்கள் தெரிவில் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசியத் தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பையும் (அம்பாறை மாவட்டம்) தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் BOT தவிசாளர் அஷ்ரப் றூமி, சஹிட் எம்.ரிஸ்மி(IPP) உட்பட பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர்கள், முக்கியஸ்தர்கள், செயற்றிட்டத் தவிசாளர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள், அங்கத்துவ வை.எம்.எம்.ஏ.களின் பதவி வழி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## மத்திய முகாம் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு மின்சார இணைப்பு

மத்திய முகாம் செய்தியாளர்

மத்திய முகாம் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு மூன்று பேர்ச் மின்சார இணைப்பு பெற்றுக் கொடுக்கப்பட்ட நிகழ்வு சனிக்கிழமை(24) மத்திய முகாமில் இடம்பெற்றது.

பொதுச் சேவைகள் மற்றும் சமூக நலன்சார் சேவைகளை தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பினால் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரால் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக் கப்பட்டு நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.



இந்நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாணப் பணிப்பாளரும் நளீர் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகருமான ஏ.நளீர், மத்திய முகாம் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எம்.சி.எம்.பயாஸ் உட்பட பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஓட்டமாவடியில் தியாகிகள் நினைவுத்தூபி திறந்துவைப்பு

மீராவோடை செய்தியாளர்

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி பாலத்துக்கருகாமையில் வெள்ளிக்கிழமை நினைவுத் தூபி திறந்து வைக்கும் நிகழ்வு (23) இடம்பெற்றது.

கல்குடா தியாகிகள் நினைவுத் தூபி குழுவினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு அல்- கிம்மா சமூக சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் மௌலவி எம்.எம்.ஹாரூன் ஸஹ்வி தலைமையில் இடம்பெற்றது.

இதில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற பயங்கரவாத யுத்தத்தின்போது தாய் மண்ணையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க கல்குடா முஸ்லிம் பகுதியிலிருந்து உயிர்நீத்த வீரர்கள், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிர்நீத்தவர்கள், கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பிரதேச கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் நினைவுகூரப்பட்டனர்.



மேலும், உயிர்நீத்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அதிதிகளாக பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பிரதேச நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தேசிய மொழிக் கொள்கையில் மலையக சமூகம் உரிமையுடன் வாழவேண்டும்

## கொட்டகலையில் செயலமர்வு

ரமேஷ் ஆறுமுகம்





இலங்கையில் தேசிய மொழிக் கொள்கையில் மலையக சமூகம் உரிமையுடன் வாழ வேண்டுமென மனித அபிவிருத்தி ஸ்தாபனம் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டத்தின் ஊடாக கொட்டகலையில் செயலமர்வொன்றை நடத்தியது.

மொழி உரிமை மற்றும் சமூக ஒருமைப்பாடு எனும் தலைப்பில் இந்தச் செயலமர்வு மனித அபிவிருத்தி ஸ்தாபனத் தலைவர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் தலைமையில் ஹில்கூல் விடுதியில் இடம்பெற்றது.

கொட்டக்கலை மற்றும் தலவாக்கலை பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்ட மக்கள் உள்ளிட்ட அனைத்து மலையக மக்களும் தேசிய மொழி கொள்கையில் எவ்வாறு அரச நிறுவனங்களில் உரிமைகளைப் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் இந்தச் செயலமர்வு பிரதேச மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 29 ஆண்டுகளாக தேசிய மொழி உரிமை மற்றும் மனித அபிவிருத்திக்கென பல வேலைத்திட்டங்களை கண்டி, நுவரெலியா, கேகாலை மற்றும் அம்பாறை பகுதிகளில் முன்னெடுத்து வருகின்ற மனித அபிவிருத்தி ஸ்தாபனம் இதற்கான ஒரு நிகழ்வை நேற்று (25) நடத்தியது.

இந்தச் செயலமர்வில் தலவாக்கலை பிரதேச செயலகத்தின் புதிய செயலாளர் சசிபிரபா பிரேமசிங்ஹ, தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டப் பிரதிப் பணிப்பாளர் சட்டத்தரணி எம். திருநாவுக்கரசு, மனித அபிவிருத்தி ஸ்தாபன ஆலோசகரும் சட்டத்தரணியுமான அ.செல்வராஜ், வங்கி முகாமையாளரும் ஸ்தாபன செயலாளருமான த.சந்திரகுமார் உள்ளிட்ட சகவாழ்வு சங்க உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள்,அரச சார்பற்ற நிறுவனப் பிரதநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சீதையம்மனை தரிசிக்கச் சென்ற ஜெகநாத்மானந்தா சுவாமிகள்





செ.திவாகரன்



நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையின் அழைப்பையேற்று இலங்கை வந்துள்ள ஜெகநாத்மானந்தா சுவாமிகள் கடந்த வெள்ளிக்கிழமை (23) நுவரெலியா சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு அங்கு நடைபெற்ற விசேட பூஜையிலும் கலந்துகொண்டார்.

இதன்போது சுவாமியை நுவரெலியா இந்து கலாசார பேரவையின் தலைவர் பாலகிருஷ்ணன் மாலை அணிவித்து வரவேற்பதையும் அதனைத் தொடர்ந்து நுவரெலியா பிளக்பூல் சென். அந்தனிஸ் பாடசாலை, நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு சுவாமிகள் சென்றபோது பாடசாலை மாணவிகள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

அங்கு மாணவர்களுக்கு யோகா, தியானம் என்பவற்றின் முக்கியதுவம் தொடர்பாக சுவாமிகள் தெளிவுபடுத்தியதோடு மாணவர்களுக்கு ஆசீர்வாதமும் வழங்கினார்.

இவ் வைபவங்களில் நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையின் நிர்வாக சபை உறுப்பினர்களும் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவ -மாணவிகளும் கலந்து கொண்டு சுவாமியிடம் ஆசி பெற்றனர்.

# மகாவலி கங்கையில் மூழ்கிய மாணவன் உயிரிழப்பு

கண்டி நிருபர்



கண்டி, தென்னேகும்புறை பிரதேசத்தில் நீராடச் சென்ற மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கிய நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றையவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

கண்டி தென்னேகும்புறை பாலத்திற்கு அருகில் மகாவலி கங்கையில் நீராடச் சென்ற இருவரே இவ்வாறு ஆபத்தை எதிர்கொண்டனர்.

கண்டியில் உள்ள பிரதான பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மேற்படி இருமாணவர்களும் 15 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதில் ஒருவர் அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். கண்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# போதைப்பொருள் விற்பனை செய்த மருந்துக்கடை சுற்றிவளைப்பு

தலவாக்கலை நிருபர்






கொட்டக்கலை நகரில் பாடசாலை மாணவர் களையும் தோட்ட மக்களையும் இலக்கு வைத்து சட்டவிரோதமான முறையில் போதைப்பொருளை விற்பனை செய்து வந்த மருந்துக் கடையொன்றை கடந்த வெள்ளிக்கிழமை (23) தாம் சுற்றிவளைத்துள்ளதாக தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

நுவரெலியா உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டாளர் நிஷாந்த பிரேமதிலக மற்றும் தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமின் தளபதி பொலிஸ் பரிசோதகர் எம். பி. இளங்கசிங்க ஆகியோர் தலைமையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த மருந்துக் கடையில் சில காலமாக பாடசாலை மாணவர்கள் மற்றும் தோட்ட மக்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை செய்து வந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமின் தளபதி பொலிஸ் பரிசோதகர் எம்.பி.இளங்கசிங்க தெரிவித்தார்.

தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் கட்டளை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் எம்.பி. இளங்கசிங்கவின் மேற்பார்வையில் உப பொலிஸ் பரிசோதகர்கள் நிஷாந்த, ராஜபக்ஷ, பொலிஸ் சார்ஜன்ட்களான 12349 அசங்க, 68639 குலதுங்க, 34460 ஜெயக்கொடி, பொலிஸ் கான்ஸ்டபிள்கள் 82809 கமகே, 25392 குலசேகரம் மற்றும் சாரதி 13887 கொடித்துவக்கு ஆகியோர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.







கண்டி சுதும்பொல ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த தேர்த் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்றது. பெருமளவு பக்தர்கள் பங்குபற்றியிருந்த விழாவில் பக்தர்களின் காவடியாட்டம், பறவைக்காவடி மற்றும் பாற்குட பவனி என்பனவும் இடம்பெற்றிருந்தன. (கண்டி நிருபர்)

# பயனாளிகளுக்கு காசோலை வழங்கல்



மட்டக்களப்பு

'சுபீட்சத்தின் நோக்கு - உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' தேசிய வேலைத்திட்டத்துக்கமைவாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 28 பயனாளிகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் காசோலைகளை உரிய பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

கடந்த 2021 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காசோலைகளே கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் வேண்டுகோளின்பேரில் வழங்கப்பட்டன.

மண்முனை மேற்கு, மண்முனை பற்று, வாகரை மற்றும் மண்முனை தென் எருவில்பற்று ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்டு வீடுகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுவரும் 28 பயனாளிகளுக்கு இதன்போது 39 இலட்சம் பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் 320 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளருமான பூ.பிரசாந்தன், இணைப்புச் செயலாளர் ஆறுமுகம் தேவராஜா, தனிப்பட்ட செயலாளர் த.தஜீவரன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர் ஆறுமுகம் பார்த்திபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புகையிரத இணைப்பு புதிய பஸ்சேவை ஆரம்பம்

மட்டக்களப்பு செய்தியாளர்கள்

போக்குவரத்து அமைச்சினால் புலத்திசி கடுகதி புகையிரத சேவை பயன்படுத்தும் மக்களுக்காக மட்டக்களப்பு அக்கரைப்பற்றுக்கான புகையிரத இணைப்பு புதிய பஸ் சேவை இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் பணிப்பின் பேரில் சனிக்கிழமை(24) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு அரசாங்கத்தினால் கிழக்கு மாகாண பொது மக்களின் நலன் கருதி ஆரம்பித்து வைக்கப்பட்ட கடுகதி புகையிரத சேவை தலைநகரில் தமது கடமைகளை முடித்துவிட்டு திரும்பும் மக்களின் நலன் கருதி வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றபோதிலும், அதில் பிரயாணம் செய்யும் அக்கரைப்பற்று வரையிலான பொதுமக்களுக்கு இலகுவான புகையிரத இணைப்பு சேவை ஒன்று இல்லாமல் இருந்ததை பொதுமக்கள் இராஜாங்க அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்து, இவ்விடயம் சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து மட்டக்களப்பு இ.போ.சபையினால் இந்த விசேட பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்மூலம் பின்னிரவு வேளையில் மட்டக்களப்புக்கு வரும் தூர இடங்களைச் சேர்ந்த பொதுமக்கள் இதன்மூலம் நன்மையடைய உள்ளனர்.

ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் புகையிரத இணைப்பு பஸ் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சின் பிரதிநிதியாக முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளருமான பூ.பிரசாந்தன் கலந்துகொண்டு



இச்சேவையினை ஆரம்பித்து வைத்தார்.

மட்டக்களப்பு இ.போ.சாலையின் முகாமையாளர் கந்தையா ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு போக்குவரத்து சாலையின் உயர் அதிகாரிகள், ஊழியர்கள், புகையிரத நிலைய ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மாகாண புகையிரத சேவையினை வினைத்திறன் உடையதாக முன்னெடுப்பதற்கு தினசரி பிற்பகல் 03 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் புகையிரதம் மட்டக்களப்பை இரவு 10.30 மணிக்கு வந்தடையும். இதன்மூலம் இரவு புகையிரதத்தில் செல்லும் பிரயாணிகளுக்கு இது பயனுள்ளதாகவும் இரவு 10:30 மணிக்கு புகையிரதத்தில் இருந்து குறித்த பஸ் புறப்படவுள்ளதாக மட்டக்களப்பு போக்குவரத்து சபை முகாமையாளர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இதேவேளை, பொது மக்களின் பிரயாணங்களை இலகுபடுத்தும் நோக்கில் இந்த புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் பயன்படுத்தி இ.போ.சபைக்கு தொடர்ந்து தனது ஆதரவினை வழங்க வேண்டுமென முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

## தென்னை மரங்களில் வெண்ணிற ஈ நோய்த் தாக்கம்

கந்தளாய் செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வெண்ணிற ஈ நோய்த் தாக்கம் காரணமாக பயன்தரு மரங்கள் பல ஏக்கர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நோய்த்தாக்கம் ஆரம்பத்தில் தென்னை மரங்களுக்கு மட்டுமே இருந்ததாகவும் தற்போது மா, கொய்யா, வாழை மரங்களும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பல்வேறு வகையான கிருமிநாசினிகள் மற்றும் மருந்துகள் தெளித்தும் இதுவரைக்கும் நோய்த் தாக்கம் குறையவில்லையெனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை அறிவித்தபோதும் குறித்த பகுதிக்குச் சென்று பாதிப்புகளை பார்வையிடவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, விவசாய அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி, வெண்ணிற ஈ நோயைக் கட்டுப்படுத்தி தருமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# வைத்தியர் விடுதிக்கு அடிக்கல் நடும் விழா



மாளிகைக்காடு செய்தியாளர்

உலக வங்கியினால் அமுல்படுத்தப்பட்டுவரும் ஆரம்ப சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்தும் PSSP செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சுமார் 20 மில்லியன் ரூபா செலவில் வைத்திய உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட கட்டிடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில், இக்கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா வியாழக்கிழமை(22) நடைபெற்றது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஆசாத் எம்.ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

அத்துடன் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.ஏ.வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹீர், கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களப் பொறியியலாளர் ஏ.எம்.எம்.ஹக்கீம் உள்ளிட்ட முக்கிய அதிதிகளும் கலந்து கொண்டு கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்குபற்றியிருந்தனர்.

குறித்த கட்டிடத்தினை மூன்று மாத காலத்துக்குள் முடிப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் இது தொடர்பில் ஒப்பந்தக்காரர்களுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிராந்திய பணிப்பாளர் தெரிவித்தார்.

குறித்த கட்டிடம் நிவர்த்தி செய்யும் பட்சத்தில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருகின்ற வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்களின் தங்குமிட தேவையை ஓரளவு நிவர்த்திக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்வின் இறுதியாக விடுதிகளுக்கு சமுகமளித்த குறித்த குழுவினர் உத்தியோகத்தர்களிடம் குறைநிறைகளை கேட்டறிந்து கொண்டதுடன் குறைகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தனர்.

## தண்டவாளத்தில் தலையை வைத்து இளைஞன் பலி

சீனக்குடா செய்தியாளர்

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில், இளைஞன் ஒருவர் புகையிரத தண்டவாளத்தில் தனது தலையை வைத்து உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் வெள்ளிக்கிழமை(23) இடம்பெற்றுள்ளது.

கந்தளாய், பியந்த மாவத்தை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய கயான் மதுசங்க என்கின்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, சம்பவத்தினத்தன்று இரவு நேர தபால் கடுகதி புகையிரதம் திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, தண்டவாளத்தில் தனது தலையை வைத்து, உயிரை மாய்த்துக் கொண்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். உயிரிழந்த நபர் திருமணமானவர் என்றும் இந்த கொலைக்கு தானே காரணம் எனவும் குறித்த இளைஞன் கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



மூதூர் கட்டைபறிச்சான் கிராமத்தில் இறால் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களை ஊக்குவித்து அவர்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 40 மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாநகரசபை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(23) இடம்பெற்றது. வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நிதி அனுசரணையில் AHRC, PCCJ ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வினை மூதூர் பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் AHRC, PCCJ நிறுவனத்தின் இணைப்பாளர், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

**படப்பிடிப்பு:** கந்தளாய் செய்தியாளர்

# தண்டப்பணம்

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூதூர் பிரதேசத்தில் தமது வளாகத்தில் நுளம்பு பெருகும் வண்ணம் டெங்கு நுளம்பு குடம்பிகளை வைத்திருந்த ஏழு பேருக்கு எதிராக மூதூர் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டபோது குறித்த சந்தேக நபர்கள் ஏழு பேருக்கும் எதிராக தலா 10ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த சந்தேக நபர்கள் கிணற்றினை மூடிப்பராமரிக்காமை, வெட்டப்பட்ட கலன்களை வைத்திருந்தமை மற்றும் நீர்தேங்கி நிற்கும் பொருட்களை வைத்திருந்தமைக்காக இத்தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக மூதூர் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டதை அடுத்து, தினமும் வீட்டுக்கு வீடு களப்பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 'அஸ்வெசும' தொடர்பில் 30ஆம் திகதிவரை மேன்முறையீடு செய்ய காலஅவகாசம்



ஆலையடிவேம்பு செய்தியாளர்

அரசாங்கத்தின் நலன்புரி சபையினால் 'அஸ்வெசும' நலன்புரி கொடுப்பனவு பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அதில் தவறுகள் இடம்பெற்றிருப்பின் எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் மேன்முறையீடு செய்ய முடியும் எனவும் அரசால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில், ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டு மக்களை தெளிவூட்டும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதுடன் மேன்முறையீடு தொடர்பான விண்ணப்பங்களும் அலுவலகத்தினால் வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பெயர்ப் பட்டியலில் தவறு இடம்பெற்றுள்ளதாகவும் இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முன்பாக கூடிய பொதுமக்கள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆயினும், சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் வீதியினை தடை செய்யவேண்டாம் எனவும் தங்களது கோரிக்கையினை பிரதேச செயலகத்தில் முன்வைக்குமாறும் கேட்டுக்கொண்டனர். இதற்கிணங்க, பிரதேச செயலகம் உள்ளே சென்ற பொதுமக்கள் சிலர் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகுதியற்றவர்களும் நலன்புரி கொடுப்பனவு பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலாளர் வி.பபாகரனிடம் தெரிவித்தனர்.

இதனை கேட்டறிந்து கொண்ட பிரதேச செயலாளர் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் இருந்தால் மேன்முறையீடு செய்ய முடியும் எனவும் திங்களன்று பிரிவு ரீதியாகவுள்ள கிராம உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் காரியாலயத்துக்கு சென்று தங்களது மேன்முறையீட்டினை கையளிக்குமாறும் கேட்டுக்கொண்டார். அவ்வாறு பிரதேச செயலாளர் தெரிவித்திருந்தபோதிலும் சிலர் பிரதேச செயலகத்தை விட்டு வெளியே செல்லாது அங்கு தரித்திருந்ததுடன் பின்னர் கலைந்து சென்றனர்.

# கலைஞர்களுக்கிடையேயான சமூக நல்லிணக்க ஒன்றுகூடல்

கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை மற்றும் அநுராதபுர மாவட்ட செயலக கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட மற்றும் அநுராதபுர மாவட்ட கலைஞர்களுக்கிடையேயான சமூக நல்லிணக்க ஒன்றுகூடல் நிகழ்வு மாவட்ட



அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் வெள்ளிக்கிழமை(23) திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கலைஞர்களுக்கிடையேயான சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே இவ்வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கலைக்கு இன, மத பேதம் கிடையாது. அனைவரும் அதனை ரசிக்க முடியும் என இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். இந்நிகழ்வில் 150இற்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இரு மாவட்டங்களையும் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் கலைஞர்களின் கலாசார நடனம், பாடல், கதை, நாடகம், கவிதை போன்ற பலவகையான நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்தது மட்டுமன்றி எல்லோரின் மனதிலும் நீங்கா இடத்தையும் பிடித்தது. இந்நிகழ்வில் திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், அநுராதபுர மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சாமில விக்கிரம ஆராய்ச்சி, திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன் இரு மாவட்டங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## போடியார் புலம்பல்!



***தமிழர்களில் அரைவாசி பிரச்சனைகளை தீர்த்துவிட்டேன் என்று லண்டனில்வைச்சு முழுப்பூசனிக்காய சோத்துக்குள புதைத்து பச்சப்பொய்ய வாய்கூசாம ரணில் மாத்தையா சொன்னவர் எலுவா? அவர் தமிழரிட பிரச்சன எண்டு சோறும், தண்ணியும், டீசலும், பெற்றோலையும் நினைச்சித்தாரோ..? அப்ப மற்ற அரைவாசி பிரச்சனதான் வடக்கு கிழக்கில ஆலோசன சப அமைத்து வில்லுப்பாட்டு பாடப்போற சங்கதியோ. இவர் லண்டனில் போய் இறங்குனதோட மூளை குழம்பி புலம்புறாரு போல!***

# நிந்தவூர் பொலிஸ் நிலையத்துக்கு குடிநீர்வழங்கல்




மாளிகைக்காடு செய்தியாளர்

குவைத் நாட்டின் அந்-நஜாத் சர்வதேச தொண்டு நிறுவன நிதி அனுசரணையில் இலங்கை அந்நூர் சேரிட்டி சமூக அமைப்பினால் நிந்தவூர் பொலிஸ் நிலையத்துக்கு குடிநீர் தாங்கி நிர்மாணித்து இலவச நீர் இணைப்பை பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(25) காலை பொலிஸ் நிலைய முன்றலில் நடைபெற்றது.

அரச காரியாலயங்கள், பாடசாலைகள், மதஸ்தலங்களுக்கு இலவச குடிநீர் வழங்குதல் மற்றும் பல சமூக நல வேலைத்திட்டங்களை அந்நூர் சமூக அமைப்பு மக்களுக்காக தொடர்ந்தும் நாடளாவிய ரீதியில் செய்து வருகின்றது.

அவர்களின் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக, அந்நூர் சமூக அமைப்பின் பிரதேச இணைப்பாளர் ஐ.எல்.நிசாட் தலைமையிலான குழுவினர் நிந்தவூர் பொலிஸ் நிலையத்துக்கு இவ்வேலைத்திட்டத்தை நிர்மாணித்து பொலிஸாரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர்.

நிந்தவூர் பொலிஸ் நிலையம் முன்வைத்த கோரிக்கைக்கிணங்க, நிர்மாணிக்கப்பட்ட இந்த வேலைத்திட்ட கையளிப்பு நிகழ்வு நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எம்.எம்.நஜீப் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா தவிசாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், இலங்கை அந்நூர் சேரிட்டி சமூக அமைப்பின் இணைப்பாளர்களான எம்.எச்.இல்யாஸ், மௌலவி ஏ.பி.எம். சிம்லி மற்றும் அந்நூர் செரிட்டி உத்தியோகத்தர்கள், நிந்தவூர் பொலிஸ் நிலைய பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்தியப் பிரதமர் மோடிக்கு எகிப்து அரசின் உயரிய விருது



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எகிப்து அரசின் உயரிய விருதான 'ஆர்டர் ஆஃப் தி நைல்' விருது வழங்கப்பட்டுள்ளது.

எகிப்து தலைநகர் கெய்ரோவிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்தியப் பிரதமர் மோடி, எகிப்து ஜனாதிபதி அப்தெல் ஃபத்தா அல்-சிசி சந்திப்பு நடைபெற்றது. கெய்ரோ ஜனாதிபதி மாளிகைக்கு சென்றிருந்த மோடியை ஜனாதிபதி அப்தெல் பத்தா அல்-சிசி வரவேற்றார்.

மோடி, அப்தெல் ஃபத்தா அல்-சிசி இடையேயான சந்திப்பின்போது இரு நாடுகள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

எகிப்து அரசின் உயரிய விருதான ஆர்டர் ஆஃப் தி நைல் விருது மோடிக்கு வழங்கப்பட்டது. ஜனாதிபதி அப்தெல் ஃபத்தா அல்-சிசி விருதை வழங்கி கௌரவித்தார்.

# முடிவுக்கு வந்தது போர் பதற்றம்



## பெலாரஸ் ஜனாதிபதி தலையீடு: பின்வாங்கியது வோக்னர்

ரஷ்யாவுக்கு எதிராக ஆயுத கிளர்ச்சியில் ஈடுபட்டு மொஸ்கோ நோக்கி முன்னேறி சென்ற வோக்னர் ஆயுதக்குழு தளபதி பிரிகோஷின், பெலாரஸ் ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தையால் போர் தொடுக்கும் முடிவிலிருந்து பின்வாங்கினார். 24 மணி நேரமாக நீடித்த போர் பதற்றம் முடிவுக்கு வந்ததால் ரஷ்யர்கள் ஆரவாரம் செய்து பிரிகோஷினை வழியனுப்பி வைத்தனர்.

ஓராண்டுக்கு மேலாக நடைபெற்றுவரும் ரஷ்யா - உக்ரைன் போரில், உக்ரைனுக்கு எதிராக ரஷ்யாவால் களமிறக்கப்பட்ட கூலிப்படை தான் வோக்னர் ஆயுதக்குழு. ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு மிகவும் நெருக்கமானவராக அறியப்பட்ட பிரிகோஷின் தலைமையின் கீழ் இயங்கி வந்த வோக்னர் குழு, மரியுபோல், பாக்முத் போன்ற நகரங்களை கைப்பற்ற ரஷ்யாவுக்கு உதவியது. இதற்கிடையே ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கே ஷைகுவுக்கும் வோக்னர் தளபதி பிரிகோஷினுக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

செர்கே ஷைகு எடுத்த மோசமான முடிவுகளால் ஆயிரக்கணக்கான வோக்னர் வீரர்கள் உயிரிழந்து வருவதாக குமுறிய பிரிகோஷின், வெள்ளிக்கிழமை ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதலில் வோக்னர் வீரர்கள் 2,000 பேர் கொல்லப்பட்டதாக பகிரங்கமாக குற்றம்சாட்டினார். அதற்கு பழி தீர்க்க மொஸ்கோவை கைப்பற்றப்போவதாக அறிவித்த பிரிகோஷின், தனது படை வீரர்கள் 25,000 பேருடன் ரஷ்யாவுக்குள் நுழைந்து ராஸ்டவ் நகரிலுள்ள முக்கிய இராணுவ தலைமையகத்தை கைப்பற்றினார்.

**வோக்னர் முதுகில் குத்திவிட்டது - புட்டின்**

வோக்னர் குழு முதுகில் குத்திவிட்டதாக குற்றம்சாட்டிய ரஷ்ய ஜனாதிபதி புட்டின், இராணுவத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்துபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என எச்சரித்தார். அதனை பொருட்படுத்தாமல் மொஸ்கோ நோக்கி முன்னேறி சென்ற வோக்னர் படைகள் மீது ரஷ்ய ஹெலிகொப்டர்கள் ஆங்காங்கே வான் தாக்குதல் நடத்திவந்தன.

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கேட்டுக்கொண்டதற்கிணங்க பெலாரஸ் ஜனாதிபதி லூகாஷென்கோ பிரிகோஷினுடன் நடத்திய சமரச பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதால் ஆயுத கிளர்ச்சி முடிவுக்கு வந்தது. ரஷ்ய இராணுவத்துக்கு எதிரான கிளர்ச்சியில் ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தப்படவில்லை எனத் தெரிவித்த பிரிகோஷின், மொஸ்கோவிலிருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் முகாமிட்டிருந்த வோக்னர் படைகளை உக்ரைனுக்கே திரும்புமாறு உத்தரவிட்டார்.

ரஷ்யாவிலிருந்து பெலாரஸுக்கு செல்ல பிரிகோஷினுக்கு அனுமதியளித்த ரஷ்ய அரசு அவர் மீது பதியப்பட்ட கிரிமினல் வழக்குகளை திரும்ப பெற்றது. படை பரிவாரங்களுடன் ராஸ்டவ் நகரிலிருந்து புறப்பட்ட பிரிகோஷினை, உற்சாக ஆரவாரத்துடன் ரஷ்யர்கள் வழியனுப்பிவைத்தனர். இதையடுத்து ரஷ்யாவில் 24 மணி நேரமாக நீடித்த போர் பதற்றம் முடிவுக்கு வந்தது.

# டைட்டான் வெடித்தது எப்படி? ஆய்வில் இறங்கிய அமெ. - கனடா




நீர்மூழ்கி கப்பல் வெடித்து சிதறியது எப்படி? என்ற ஆராய்ச்சியில் அமெரிக்காவும் கனடாவும் ஈடுபட்டுள்ளன.

டைட்டானிக் கப்பலின் உடைந்த உதிரிப் பாகங்கள் கனடாவின் அட்லாண்டிக் கடல் பகுதியில் 12,500 அடி ஆழத்தில் மூழ்கி கிடக்கின்றன. உடைந்து கிடக்கும் டைட்டானிக் கப்பலை சுற்றுலா பயணிகள் பார்வையிட அமெரிக்காவை சேர்ந்த ஓஷன்கேட் நிறுவனம் சாகச சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதற்காக டைட்டன் என்று பெயரிடப்பட்ட நீர்மூழ்கி கப்பல் கடந்த 18ஆம் திகதி 05 பேருடன் தனது பயணத்தை தொடங்கியது.

கடலின் ஆழத்தில் சென்ற நீர்மூழ்கியின் சிக்னல் துண்டிக்கப்பட்டதால் அழுத்தம் காரணமாக வெடித்து சிதறி அதிலிருந்த 05 பேரும் உயிரிழந்து விட்டதாக அமெரிக்கக் கடலோர காவல்படை வெள்ளிக்கிழமை (23) அறிவித்தது.

இந்நிலையில் டைட்டன் வெடித்து சிதறியதற்கான காரணத்தை ஆராயும் முயற்சியில் அமெரிக்காவும் கனடாவும் ஈடுபட்டுள்ளன. இதற்கான முதற்கட்ட விசாரணை தொடங்கப்பட்டுள்ளன.

**மன்னார் வளைகுடா - தென் தமிழகம் - இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு**

# மீனவர்கள் 28 வரை மீன்பிடிக்க செல்ல வேண்டாம்

உலக செய்திகள்



குமரிக்கடல், மன்னார் வளைகுடா, தென் தமிழகம், இலங்கை கடலோரப்பகுதிகளில் சூறைக்காற்று வீசக்கூடும் என்பதால், இப்பகுதிகளுக்கு நாளைமறுதினம் (28) வரை மீனவர்கள் செல்லவேண்டாம் என சென்னை வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, வங்கக்கடல், குமரிக்கடல் பகுதிகளை ஒட்டிய தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா, வடக்கு ஆந்திர கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோமீற்றர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோமீற்றர் வேகத்திலும் வீசக்கூடும்.

இலங்கை கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீற்றர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும். இப்பகுதிகளுக்கு நாளைமறுதினம் 28ஆம் திகதிவரை மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# டயலொக் கிண்ணத்தை சுவீகரித்தது தோமஸ் கல்லூரி

பாடசாலைகளுக்கிடையிலான டயலொக் றக்பி கிண்ணத் தொடரில் வெஸ்லி கல்லூரியை 19:13 என்ற அடிப்படையில் சென். தோமஸ் கல்லூரி கிண்ணத்தை வென்றது. இந்தப் போட்டி கல்கிசையில் அமைந்துள்ள சென்.தோமஸ் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

பத்து வயதுக்கு குறைவானோருக்கான போட்டியில் வெஸ்லி கல்லூரி பீ அணி, தோமஸ் கல்லூரியை ஐந்துக்கு பூச்சியம் என்ற அடிப்படையில் தோல்வியடையச் செய்தது.

பன்னிரண்டு வயதுக்கு குறைவானோருக்கான போட்டியில் தோமஸ் கல்லூரியை 10:05 என்ற அடிப்படையில் வெஸ்லி கல்லூரி வென்றது.

பதினான்கு வயதுக்கு குறைவானோருக்கான போட்டியிலும் வெஸ்லி கல்லூரியின் ஏ அணி தோமஸ் கல்லூரியின் ஏ அணியை 17:05 என்ற அடிப்படையில் வென்றது. அதேபோன்று 16 வயதுக்கு குறைவானோருக்கான போட்டியில் தோமஸ் ஏ அணி, வெஸ்லி ஏ அணியை 17:12 என்ற அடிப்படையில் வென்றமை குறிப்பிடத்தக்கது.

Dialog SCHOOLS RUGBY

# முன்னாள் உலக சம்பியனை வீழ்த்திய ஸிம்பாப்வே



இந்தியாவில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் மேற்கு இந்தியத் தீவுகளை எதிர்த்து விளையாடிய ஸிம்பாப்வே 35 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கு இந்தியத் தீவுகள் பந்து வீச்சைத் தெரிவு செய்தது. ஸிம்பாப்வே அணி 49.5 ஓவர்களில் 10 விக்கெட்டுகளையும் இழந்து 267 ஓட்டங்களை சேர்த்தது.

ஸிம்பாப்வே அணியின் ராஸா(68), ரயான் புர்ல்(50) ஓட்டங்கள் எடுத்தனர்.

268 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை துரத்திய மேற்கு இந்தியா 44.4 ஓவர்களில் 10 விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்கள் எடுத்தது.

ஸிம்பாப்வேக்கு எதிராக ஏழு ஆண்டுகளில் மேற்கிந்தியத் தீவுகள் பெற்ற முதல் தோல்வி இதுவாகும். இதுவரை 50 ஒருநாள் போட்டிகளில் நேருக்கு நேர் மோதியுள்ள நிலையில், இது ஸிம்பாப்வே அணிக்கு 11ஆவது வெற்றியாகும்.





**ஓமானை வீழ்த்திய இலங்கை**

உலகக்கிண்ண தகுதிச் சுற்று ஸிம்பாப்வேயின் புலவாயோ, ஹராரே ஆகிய இடங்களில் நடந்து வருகிறது. இதில் 11ஆவது லீக் ஆட்டத்தில் ஓமானை எதிர்கொண்டது இலங்கை. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை ஓமானை துடுப்பெடுத்தாடும்படி பணித்தது.

30.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 98 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இலங்கை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான கருணாரத்னே பதும் நிசாங்கா ஆகியோர் சிறப்பாக விளையாடினர். 15 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்கள் அடித்து இலங்கை அணி வெற்றி பெற்றது. சிறப்பாக பந்து வீசிய ஹசரங்க 05 விக்கெட்டுகளை எடுத்தார். இதற்கு முன்னால் நடந்த போட்டியில் ஹசரங்க 06 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் பட்டியலிலிருந்து கஞ்சா நீக்கம்?



தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சோதனை நெறிமுறைகளின் பட்டியலில் இருந்து மரிஜுவானாவை நீக்க தேசிய கல்லூரி தடகள சங்கம் (NCAA) வலியுறுத்தியுள்ளது.

NCAA இன் போட்டி பாதுகாப்புகள் மற்றும் விளையாட்டுகளின் மருத்துவ அம்சங்கள் (CSMAS) இந்த நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்துள்ளன.

உலக ஊக்கமருந்து எதிர்ப்பு ஏஜென்சி (வாடா) தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளின் பட்டியலில் கஞ்சாவின் இடம், துஷ்பிரயோகம் செய்யும் பொருட்களின் கீழ், ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாகும். ஏனெனில் பல நாடுகள் மரிஜுவானாவை சட்டப்பூர்வமாக்கி, குற்றமற்றதாக்கி வருகின்றன.

டோக்கியோ 2020 ஒலிம்பிக்கில் இருந்து அமெரிக்க ஓட்டப்பந்தய வீரர் ஷாகாரி ரிச்சர்ட்சன் நீக்கப்பட்டதை அடுத்து, கஞ்சாவை பட்டியலிலிருந்து நீக்குவதற்கான அழைப்புகள் அதிகரித்தன. இது அமெரிக்காவின் பல மாநிலங்களில் சட்டப்பூர்வமானது.

இருப்பினும், WADA நிர்வாகக் குழு கடந்த ஆண்டு செப்டெம்பரில், பட்டியல் நிபுணர் ஆலோசனைக் குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்து, அது தொடர்ந்து இருக்க ஒப்புதல் அளித்தது.

# சம்பியனானது கொலின்ஸ் விளையாட்டுக்கழகம்





வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வடமராட்சியில் உள்ள 15 விளையாட்டுக் கழகங்கள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றின. வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வடமராட்சி சிரேஷ்ட உதைபந்தாட்ட சங்கத் தலைவர் ம.மதியழகன் தலைமையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முன்னாள் உதைபந்தாட வீரர்களான க.பாக்கியராசா(மாலி), வ.சின்னத்தம்பி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

சிறந்த விளையாட்டு வீரராக ம.சதீஸ்கரன் (கொலின்ஸ்), சிறந்த கோல்கீப்பராக லோ. நிமலன் (டைமன்ஸ்), அதிக கோல்கள் அடித்த வீரர் பி.மனோராஜ். (பருத்தித்துறை ஐக்கிய வி.க), சிறந்த மூத்த வீரர் ரி.சந்திரபோஸ்(கலைவாணி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7